இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

நவம்பர் 2023 November | இதழ் 393 Issue




# தமிழர் தகவல்
## TAMILS' INFORMATION

ESTD From The Community To The Community 1991

Premier Canadian Tamil Journal




சேக்கம் அமைப்பின் நாற்பதாவது ஆண்டு விழா



'இருப்பும் இடர்களும்'



'நிருத்த நிறைஞர்'



'விழியும் துளியும்'

**தமிழின அழிப்பு அறிவூட்டல் மசோதா 104ஐ பாதுகாப்போம்!**

சமூகத்துடன் இணைந்த வளர்ச்சி ஸ்தாபிதம் -1991

33rd Year வது ஆண்டில்

Growing with the Community ESTD-1991

இது ஒரு மாதாந்த தகவல் மஞ்சரி a monthly information digest

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

ஆரம்பம்
பெப்ரவரி 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

தொலைபேசி:
416 920 9250

மின்னஞ்சல்
tamilsinfo@sympatico.ca

தயாரிப்பு
ஈழத்தமிழர் தகவல் நிலையம்
ரொறன்ரோ &
தமிழர் தகவல் ஆய்வுப் பிரிவு

வெளியீடு
அகிலன் அசோஷியேற்ஸ்

முதன்மை ஆசிரியர்
திரு எஸ். திருச்செல்வம்

இணை ஆசிரியர்
ரஞ்சி திரு

உதவி ஆசிரியர் &
தயாரிப்பு முகாமையாளர்
சசி பத்மநாதன்

உதவி ஆசிரியர்கள்
குயின்ரஸ் துரைசிங்கம்
அனோஜினி குமாரதாசன்

பொது முகாமையாளர்
ஆர். ஆர். ராஜ்குமார்

பொதுமக்கள் தொடர்பு
என். விமலநாதன்
என். குமரதாசன்
இ. சிவலிங்கம்
வே. விவேகானந்தன்
ப. சிவசுப்பிரமணியம்

தொழில்நுட்ப உதவி
ஹரன்கிறாஃப்

மாதாந்தம்
5000 பிரதிகள்

ஆண்டு மலர்
6000 பிரதிகள்

இணையம்
www.tamilsinformation.info

ஆசிரியரிடமிருந்து... From the Editor

# வெறுமை

தமிழர் தாயகத்தில் வாழும் பெரும்பாலானவர்கள் அங்கிருந்து வெளியேறி வருவது தொடர்பான செய்திகளும் தகவல்களும் தினமும் வந்து கொண்டிருக்கின்றன.

புலம்பெயர்வதற்காக விமானப் பயணத்தை எதிர்பார்த்திருப்பவர்கள் ஒருபுறம். பலகோடி ரூபாக்களை ஏஜென்சிக்காரர்களிடம் கொடுத்து ஏமாந்து கொண்டிருப்பவர்கள் இன்னொரு புறம்.

வெளிநாடுகளிலுள்ள தங்கள் உறவுகளுடன் தொடர்பு கொள்பவர்கள் பலரும் பயணத்துக்கான நிதியுதவியைக் கேட்பவர்களாகக் காணப்படுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன்னர் கனடாவுக்கு வருகை தந்திருந்த “டான்' தொலைக்காட்சி நிறுவன அதிபர் திரு. எஸ்.எஸ். குகநாதன் இங்கு பங்குபற்றிய நிகழ்ச்சிகளில் இந்த நிலைமையை படம் காட்டுவது போன்று விபரித்தார்.

சில அரசியல் பிரமுகர்களும் இவ்விடயத்தை அவ்வப்போது வெளிப்படுத்தி வருகின்றனர். இவர்களுக்குள்ள அங்கலாய்ப்பு, இந்நிலை தொடருமானால் தமிழர் பிரதேச நாடாளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கை குறைந்துவிடுமென்பதே.

எம்மவர் வெளியேற்றம் இதே வீச்சில் தொடருமானால் எதிர்காலத்தில் தமிழ் மண் வெறுமையாகிவிடும். அப்போது சிங்களக் குடியேற்றம், விகாரைகள் நிர்மாணம், ராணுவ மயமாக்கல் என்பவை இலகுவாகிவிடும்.

இதனை எவரும் புரியும் மொழியில் கடந்த மாதம் கனடா வருகை தந்த யாழ்ப்பாண கத்தோலிக்க மறைமாவட்ட தொடர்பாடல் நிலைய அதிபரான வண. பிதா அன்ரன் ஸ்ரீபன் அவர்கள் தெரியப்படுத்தினார். இதற்கு அவர் பயன்படுத்திய அதியுச்ச அர்த்தமுள்ள சொல்லாடல் ‘வெறுமை' என்பது.

எங்கள் மக்கள் இன்று வெறுமை நிலைக்குள் வாழ்ந்து வருகிறார்கள் என்று சுட்டிய வண.பிதா அங்கு இப்போது ‘தலைமைத்துவ வெறுமை'யும் ஏற்பட்டுள்ளதென்று அழுத்திக் கூறினார்.

வெறுமை என்பதற்கான ஆங்கிலப் பதம் Emptiness என்பது. வெறுமையை சூனியம் என்றும் சொல்லலாம்.

தமிழர் தாயகம் சூனியப் பிரதேசமாக இன்று இருக்கிறதென்றால் வறுமை, வருமானமின்மை, பொருளாதாரப் பிரச்சனை, அச்சச் சூழல் என்று பல காரணங்கள் உண்டு. இவையெல்லாம் அங்குள்ளன என்பதையே வண. பிதா அவர்கள் ‘வெறுமை' என்ற பதத்துக்குள் அடக்கிக் கொண்டார்.

இந்நிலையை மாற்றுவதற்குரிய தலைவர்கள் அங்கில்லை என்பதை ‘தலைமைத்துவ வெறுமை'யும் உள்ளது என்று அவர் குறிப்பிட நேர்ந்தது.

எத்தனை பேருக்கு இதன் ஆழமும் நீளமும் புரியப் போகிறது? புரியாதவர்களுக்குப் புரிய வைக்க தலைவர்களும் இல்லை என்றால்.... வெறுமையே நீட்சி பெறும்.

**திரு எஸ். திருச்செல்வம்**

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION

ISSN 1206-0585

Established
February 1991

P.O. Box-3, Station F
Toronto, ON M4Y-2L4,
Canada

Tel: 416 920 9250

E-mail
tamilsinfo@sympatico.ca

Produced by
Eelam Thamil Information Centre (ETHIC) of Toronto & Thamil Information Research Unit (THIRU)

Published by
Ahilan Associates

Editor in chief
Thiru S. Thiruchelvam

Associate Editor
Ranji Thiru

Assistant Editor and Production Manager
Sasi Pathmanathan

Assistant Editors
Quintus Thuraisingam
Anojini Kumaradasan

General Manager
R. R. Rajkumar

Public Relation
N. Vimalanathan
N. Kumaradasan
R. Sivalingam
V. Vivekananthan
P. Sivasubramaniam

Technical Support
Haran Graph

Monthly
5000 Copies

Annual
6000 Copies

Website
www.tamilsinformation.info

தமிழர் தகவல்
TAMILS' INFORMATION
ESTD From The Community To The Community 1991

## 33வது ஆண்டு மலர் தயாரிப்பு ஆரம்பம் !

### கட்டுரைகள் வரவேற்கப்படுகின்றன

33வது ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கும் 'தமிழர் தகவல்' எதிர்வரும் பெப்ரவரி மாதத்தில் 34வது ஆண்டில் கால் பதிக்கவுள்ளது.

கனடாவின் மூத்த தமிழ் இதழாக மதிப்புப் பெற்றிருக்கும் தமிழர் தகவலின் 33வது ஆண்டு பூர்த்தி மலரை அடுத்த பெப்ரவரி மாதத்துடன் இணைந்ததாக வெளியிடுவதற்கு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்படுகிறது. 2020 மார்ச் மாதத்தில் கொரோனா பேரிடர் ஆரம்பமானதால், அதன் பின்னரான ஆண்டு மலர்களை வழமைக்கு மாறாக யூலை மாதத்தில் வெளிக்கொணர வேண்டிய சூழ்நிலை தவிர்க்க முடியாததாக அமைந்தது.

இப்போது நிலைமை மாற்றமடைந்துள்ளமையால் தமிழர் தகவல் ஆண்டு மலரையும் அடுத்த வருட முற்பகுதியில் வெளியிட ஏற்பாடுகள் செய்கிறோம். மலருக்கான கட்டுரைகளை நீங்கள் இப்போது அனுப்பலாம். தமிழ் அல்லது ஆங்கிலத்தில் கட்டுரைகளை எழுதலாம். தகவல் (Information) என்ற அடிப்படையில் கட்டுரைகள் அமைய வேண்டியது அவசியம்.

இந்த மாதம் (நவம்பர்) 30ம் திகதிவரை கட்டுரைகள் ஏற்கப்படும். tamilsinfo@sympatico.ca என்ற மின்னஞ்சல் முகவரியூடாக அல்லது பின்வரும் தபால் விலாசத்துக்கு கட்டுரைகளை அனுப்பலாம்:
Tamils' Information,
P.O.Box - 3, Station - F,
Toronto, ON., M4Y 2L4.

மேலதிக விபரங்கள் தேவைப்படின், 416 920 9250 தொலைபேசி இலக்கத்தில் உங்கள் பெயரையும் தொடர்பு கொள்ளக்கூடிய தொலைபேசி இலக்கத்தையும் விபரமாகப் பதிவு செய்தால் தாமதமின்றி தொடர்பு கொள்ளப்படும்.

# கனடிய - இந்திய ராஜரீக உறவு மேலும் மேலும் சிக்கலாகிறது! 41 கனடிய அதிகாரிகள் வெளியேற்றம்!!

சர்வதேச அரங்கில் இப்போது மூன்று பிரச்சனைகள் பிரபல்யமடைந்து காணப்படுகின்றன. ரஷ்ய - உக்ரைன் போர், இஸ்ரேலிய - ஹமாஸ் மோதல், கனடிய - இந்திய ராஜரீக உறவு முறிவு என்பவை இவை.

நாம் வாழும் நாடு கனடா என்பதால் இந்தியாவுடனான முறுகல் முக்கியமானதாக அவதானிக்கப்படுகிறது. கனடியப் பிரஜையான இந்திய வம்சாவளியைச் சேர்ந்த நஜ்ஜீரின் படுகொலையே இரு நாடுகளுக்கிடையேயான உரசலை விரிசலாக்கிச் செல்கிறது.

இந்திய ராஜதந்திரியை கனடா வெளியேற்றியதற்கு மறுத்தானாக கனடிய ராஜதந்திரியை இந்தியா வெளியேற்றியது. இதன் அடுத்த கட்டமாக கனடாவிலிருக்கும் இந்திய ராஜதந்திரிகளை இலக்கு வைத்து காலிஸ்தான் ஆதரவாளர்கள் போராட்டங்களை நடத்தினர்.

**மருத்துவ, வணிக மற்றும் மகாநாடுகளில் பங்குபற்றுபவர்களுக்கான விசா வழங்கும் சேவையை இந்தியத் தூதரகம் கடந்த மாதம் 25ம் திகதி முதல் றொறன்ரோ, ஒட்டாவா, வன்கூவர் நகரங்களிலுள்ள தூதரக அலுவலகங்களில் மீளஆரம்பித்துள்ளது.**

இதனால் தனது நாட்டு ராஜதந்திரிகளுக்கு சிறப்பான பாதுகாப்பு வழங்கப்பட வேண்டுமென கனடாவிடம் இந்தியா கோரியது. திடீரென இந்தியாவிலுள்ள கனடிய தூதரக பணியாளர்களின் ராஜதந்திர விலக்கை ரத்துச் செய்வதாக இந்திய அரசு அறிவித்தது.

சர்வதேச சட்ட விதிகளை மீறும் செயல் இதுவென கருத்து வெளியிட்ட கனடா, முதற்கட்டமாக அங்கு பணியாற்றிய நாற்பத்தொரு கனடியர்களையும் அவர்களின் குடும்ப உறவினர்களான 42 பேரையும் கனடாவுக்கு வரவழைத்தது. இதனை வேறுவிதமாகச் சொல்வதானால் இந்தியா இவர்களை கட்டாயமாக வெளியேற வைத்தது எனலாம்.

நிஜ்ஜாரின் கொலையுடன் இந்திய அரசை சம்பந்தப்படுத்தி, அதற்கான நம்பக ஆதாரங்கள் இருப்பதாக கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ அறிவித்ததையடுத்து அதற்கான ஆதாரங்களை இந்தியா கோரியது.

இந்தக் குற்றச்சாட்டை முழுமையாக விசாரிக்க இந்தியாவின் ஒத்துழைப்பை கனடிய பிரதமர் கோரியபோது, முதலில் முழு விபரங்களையும் தருமாறு இந்தியா கேட்டது. அதேசமயம் இந்தியாவிலிருந்து கனடாவுக்குப் பயணம் செய்பவர்களை இந்திய அரசு எச்சரித்ததுடன் கனடிய நிலைப்பாட்டில் ஆவேசமாக செயற்படவும் ஆரம்பித்தது.

இப்போது 21 கனடியர்கள் மட்டுமே இந்தியாவிலுள்ள தூதரகங்களில் பணியாற்றுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. எண்ணிக்கையைப் பொறுத்தளவில் கனடாவில் பணிபுரியும் இந்திய தூதரக அதிகாரிகளைவிட, இந்தியாவில் பணியாற்றும் கனடிய தூதரக அதிகாரிகள் அதிகமென இந்தியா தெரிவிக்கிறது.

இந்தியாவின் நடவடிக்கைகளை பழிவாங்கல் அல்லது கைது செய்வதற்கான அச்சுறுத்தல் என்று கனடிய வெளிவிவகார அமைச்சு கருதுகிறது.

கனடாவின் குடியேற்றத் திட்டத்தின் கீழ் இந்தியாவிலிருந்து இவ்வாண்டு இறுதிக்குள் இங்கு வருவதற்குத் தெரிவான 17,500 பேரின் இறுதி முடிவுகளை இரு நாடுகளுக்குமிடையிலான ராஜரீக சிக்கல் பின்தள்ளியுள்ளதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டுகின்றனர்.

இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியின் அரசாங்கத்துடன் ஒட்டாவாவுக்கு தொழில்முறை உறவு தேவையென்று சுட்டிக்காட்டியுள்ள கனடிய எதிர்க்கட்சித் தலைவர் பியர் பொலிவியர், உலகின் மிகப்பெரிய நாடான இந்தியாவில் கனடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ கேலிக்கூத்தாகப் பார்க்கப்படுகிறாரென்றும் சுட்டியுள்ளார்.

மோடி அரசாங்கம் லிபரல் கட்சி மீது அதிருப்தி கொண்டுள்ளதாகக் கூறியுள்ளது. ஆனால், ஒட்டுமொத்தமாக கனடா மீது அல்ல என்ற கருத்து கவனிக்கத்தக்கது. அண்மைக்காலத்தில் மக்கள் செல்வாக்கு குறைந்தவராகக் காணப்படும் ஜஸ்ரின் ரூடோ பதவி விலக வேண்டுமென பெரும்பாலான கனடியர்கள் விரும்புவதாக பிந்திய கருத்துக் கணிப்பொன்று தெரிவிக்கிறது.





றஞ்சி திரு

# சின்னச் சின்ன தகவல்கள்

இந்து சமுத்திரத்தில் இந்தியாவின் தென்முனையில் அமைந்திருப்பது இலங்கை என்ற குட்டித்தீவு. இது நான்கு பக்கமும் கடலால் சூழப்பட்ட, உல்லாசப் பயணிகளின் விருப்புக்குரிய முக்கிய இடம்.

இதன் தற்போதைய சனத்தொகை 22 மில்லியனைத் தாண்டியுள்ளது. 2022ம் ஆண்டைவிட 2023ல் சனத்தொகை 0.28 வீதத்தால் அதிகரித்துள்ளது.

பிரித்தானியாவிடமிருந்து 1948 பெப்ரவரி 4ம் திகதி இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்தது. 1978ம் ஆண்டு மே 22ம் திகதி ஜே.ஆர். ஜெயவர்த்தன இலங்கையைக் குடியரசாக பிரகடனம் செய்து அதன் முதலாவது ஜனாதிபதியானார்.

இத்தீவில் டி.எஸ்.சேனநாயக்க முதல் ரணில் விக்கிரமசிங்க வரை பத்துப் பிரதமர்கள் பதவியில் இருந்துள்ளனர். ஜனாதிபதியாக ஜே.ஆர். ஜெயவர்த்தன முதல் ரணில் விக்கிரமசிங்க வரை எண்மர் பதவி வகித்துள்ளனர்.

இங்கு தற்போது 2 மில்லியன் மனநோயாளர்கள் இருப்பதாகவும் ஒரு லட்சத்துக்கும் அதிகமானோர் பார்வைக் குறைவுள்ளவர்களாக இருப்பதாகவும் மருத்துவ அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

தலைநகரான கொழும்பில் மட்டும் சுமார் 3,500 யாசகர்கள் உள்ளனர். இவர்களில் பலரினதும் வங்கிக் கணக்குகளில் பல லட்சம் ரூபாக்கள் வைப்பிலிடப்பட்டுள்ளன. இவர்களில் சிலர் வட்டிக்குப் பணம் கொடுக்கும் முதலாளிகள்.

தெருநாய்கள் (கட்டாக்காலிகள்) அதிகமுள்ள தெற்காசிய நாடுகளில் இலங்கை முன்னணியில் உள்ளது. இவைகளைக் கட்டுப்படுத்தவும் பிடித்துக் கொடுக்கவும் உள்ளூராட்சிச் சபைகள் பல மில்லியன் ரூபாக்களை வருடாந்தம் செலவிடுகின்றன.

நாளொன்றுக்கு 7-8 விபத்து மரணங்கள் சராசரியாக இடம்பெறுகிறது. அதாவது மூன்று மணித்தியாலத்துக்கு ஒருவர் வீதம் இறக்கிறார். அநேகமான விபத்துகள் மோட்டார் சைக்கிள்கள், டிப்பர் வாகனங்களால் இடம்பெறுவதாக பொலிசார் தெரிவிக்கின்றனர்.

இலங்கையின் விஸ்தீரணம் 25,610 கிலோமீற்றர். பெரும்பாலான நெடுஞ்சாலைகள் சீனாவின் நிதி உதவியால் பட்டுப்பாதைகளாக்கப்பட்டுள்ளன. இவற்றைப் பயன்படுத்தும் வாகனங்களிடம் கட்டணம் அறவிடப்படுகிறது.

25 நிர்வாக மாவட்டங்களில் 256 பிரதேச செயலகங்கள் (உதவி அரசாங்க அதிபர்கள்) உள்ளன. தற்போது 14,008 கிராம சேவகர்கள் உள்ளூர் மட்டத்தில் அரச பணிகளை மேற்கொள்கின்றனர்.

இங்குள்ள 432 பொலிஸ் நிலையங்களில் சுமார் 80,000 பொலிசார் பல்வேறு பதவிகளில் உள்ளனர். இதன் தலைவரான பொலிஸ் மாஅதிபர் அலுவலகம் கொழும்பிலுள்ளது.

தரைப்படை, கடற்படை, வான்படை ஆகிய முப்படைகளிலும் 3,46,000 பேர் உள்ளனர். ரிசேர்வ் படையில் 36,000 பேர் உள்ளனர். அத்துடன் விசேட அதிரடிப்படை, சிவில் பாதுகாப்புப்படை, கடற் பாதுகாப்புப்படை என்பனவும் உண்டு.

நாட்டின் பிறப்பு வீதம் 1,000 பேருக்கு 13.61 வீதம் என்பதாகும். 1000 பேருக்கு 6.54 என்பது. ஒருவரது வாழும் காலம் சராசரியாக 82 வயதென மதிப்பிடப்பட்டுள்ளது.

# மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு



மாவீரர் பெற்றோர் குடும்ப மதிப்பளிப்பு நாள் நினைவேந்தல் இந்த மாதம் 19ம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை பத்து மணி முதல் பகல் இரண்டு மணிவரை ஸ்காபரோ 3840 பிஞ்ச் அவெனியு கிழக்கு வீதியில் (Finch & Kennedy) அமைந்துள்ள மெற்றோபொலிற்றன் மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. மாவீரர் பெற்றோர், குடும்பத்தினர், உணர்வாளர்கள், செயற்பாட்டாளர்கள், தமிழ் ஆர்வலர்கள், தன்னார்வத் தொண்டர்கள் அனைவரையும் கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம் அழைக்கிறது. தொடர்பு இலக்கம்: 647 619 3619

# மாவீரர் விபரங்கள் திரட்டும் பணி

கனடிய மண்ணுக்கு அண்மைக் காலத்தில் வருகை தந்த மாவீரர் குடும்பத்தினர், தற்போது புதிய முகவரியில் வாழும் மாவீரர் குடும்பத்தினர் புதிய தொலைபேசி இலக்கங்கள், புதிய முகவரிகள் போன்ற விபரங்களை தந்துதவுமாறு கனடிய தமிழர் நினைவெழுச்சி அகவம் வேண்டுகோள் விடுத்துள்ளது. தொடர்பு இலக்கம்: 647 619 3619. மின்னஞ்சல்: ctro@tamilremembrance.com

# மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் வெளியீடு வைபவம்

கனடா ‘இலக்கிய வெளி’ நடத்தும் மொழிபெயர்ப்புச் சிறப்பிதழ் வெளியீடு டிசம்பர் மாதம் 3ம் திகதி ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 4 மணிமுதல் ஸ்காபரோ தமிழ் இசைக்கலாமன்ற மண்டபத்தில் இடம்பெறவுள்ளது. ஆர்வலர்கள் அனைவரும் அழைக்கப்படுகின்றனர். தொடர்புகளுக்கு அகில் சாம்பசிவம் - 416 822 6316



பேராசிரியர் அமுது ஜோசெப் சந்திரகாந்தன்

# போர் ஒடுங்கினும் துயர் ஒடுங்காது

## ஊரும் உலகும் - 21

பத்துக்கும் மேலான பயங்கரப் போர்களின் பேரழிவுகளும் துயர்மிகு அவலங்களுமே இந்த நூற்றாண்டின் ஆரம்ப காலம் முதல் உலகின் பல்வேறு நாடுகளில் குழந்தைகளையும் ஆயுதம் தரியாத அப்பாவி மக்களையும் அதிகம் பாதித்தவை. பல்லாயிரக் கணக்கில் மக்கள் செத்து மடிவதற்கு காலாய் அமைந்தவை.

2001இல் அமெரிக்காவில் நிகழ்ந்த கொடூரத் தாக்குதல்கள் 9/11 எனும் குறியீட்டில் மனித உணர்வுகளில் இன்றுவரை உயிர்வாழ்பவை. அங்கும் அப்பாவி மக்கள் இறந்து மாண்டனர். அதைத் தொடர்ந்து ஆப்கானிஸ்தான், ஈராக், லிபியாவில் சில நாடுகளின் சேர்ந்து அமெரிக்கா முன்னெடுத்த மூன்று பெரும் போர்களும் பல அழிவுகளைத் தருவித்தது.

கொங்கோ உள்நாட்டுப் போரின்போது அரச படைகளை ஆதரித்து அங்கோலா, நமீபியா, சாட், சூடான், சிம்பாப்வே புருண்டி, ருவாண்டா, உகாண்டா துருப்புக்கள் என ஒன்பது நாடுகளின் படைகள் இணைந்து பன்னாட்டுப் போராக மாபெரும் மனித அழிவையும் 2003ல் நிகழ்த்தி முடித்தன. இந்த குருதிக் களரியில் பிறந்ததுதான் கொங்கோ ஜனநாயகக் குடியரசு. இந்த மனித பலிகளிலும் பழிகளிலும் ஐரோப்பிய நாடுகளுக்கு பங்கில்லை எனக் கூறமுடியாது.

சிறீலங்கா அரசு முன்னெடுத்த தமிழ்இன அழிப்புப்போரை, இந்தியா, சீனா, அமெரிக்கா, பாகிஸ்தான் உள்ளடங்கலாக பல ஐரோப்பியா நாடுகள் தமது நவீன ஆயுத-படை பலத்துடன் 2009ல் முடித்து வைத்தன என்பது உலகறிந்த உண்மை.

அரபு வசந்தம் எனும் பெயரில் மாற்றம் வேண்டி விளைந்த மக்கள் எழுச்சி மத்திய கிழக்கு முதல் வட ஆபிரிக்கா வரை பரவி, துனிசியா, லிபியா, எகிப்து மற்றும் இயேமன் ஆகிய நாடுகளில் சர்வாதிகார ஆட்சிகள் வீழ்வதற்கு பாதை சமைத்தன. எனினும் இந்தப் புரட்சிகளின் தொடர் நிகழ்வின் விளைவாக சிரியாவில் இறந்த அப்பாவி மக்களின் எண்ணிக்கை மூன்று இலட்சத்திற்கும் அதிகம்.

இவை தவிர மதச்சார்புள்ள பல தீவிரவாதக் போராளிக் குழுக்கள் குறிப்பாக நைஜீரியாவின் போகோ ஹராம் (மேற்கத்தியமயமாக்கல் சாத்தானிலும் தீமை) எனும் ஆயுதக் குழுவும், இன்னும் பல்வேறு மத, இன, தேசிய இலட்சியங்களை முன் வைத்து போராடும் குழுக்கள் என ஏராளமான போர்க்குணம் கொண்ட பகைமைகள் பற்றி நாம் அடிக்கடி அறிகிறோம்.

கடந்த இரண்டு தசாப்தங்களாக இடம்பெற்ற போர்கள் யுத்தங்களினால் ஏற்பட்ட வடுக்களும் காயங்களும் ஆறும் முன்பே அவற்றை முற்றாய் பின்தள்ளிவிட்டு இப்போது இரண்டு பெரும் போர்கள் முன்னிலைப்படுத்தப்பட்டுள்ளன.

சென்றாண்டு பெப்ரவரி 24ல் ரஸ்யா உக்ரைன் மீது முழு அளவிலான படையெடுப்பைத் துவங்கியது. உக்ரைனுக்கு ஆதரவு தெரிவித்து வடஅமெரிக்க, ஐரோப்பிய நாடுகளின் பணம் மற்றும் ஆயுத, தொழில்நுட்ப பங்களிப்பு பறந்து வந்தது. இன்றுவரை இப்போர் வளர்நிலையிலேயே உள்ளது.

இரண்டு வாரங்களுக்கு முன்னர் ஹமாஸ் தீவிரவாதக் குழுவின் தாக்குதல்களைத் தொடர்ந்து இஸ்ரேல் போர்ப் பிரகடனம் செய்து முழு அளவிலான போரைத் முன்னெடுகத் துவங்கியுள்ளது.

இந்தப் போர்கள் அனைத்திலுமே சில பொதுமைகள் உண்டு. இரு நாடுகளுக்கு இடையிலான இன, மத, நில, வள, இலட்சிய முரண்பாடுகளைத் தளமாகக் கொண்டு ஆரம்பித்த வேறுபாடுகள் போராக வெடிக்கும்போது ஏனைய நாடுகள் தமக்குள் குழுக்களாக பிரிந்து தாம் தேர்ந்துள்ள ஒரு நாட்டின் பின்னால் அணிவகுத்து, போரை ஊக்குவிப்பது மட்டுமன்றி போரிடும் நாடுகளுக்கு நவீன ஆயுதங்கள், கருவிகள், புதிய உத்திகள், தொழில் நுட்பங்களையும் அள்ளி வழங்குகின்றன.

பிருஸ்ய இராணுவத்தின் சிறந்த கோட்பாட்டாளரான கார்ல் வான் கிளாஸ்விட்ஸ், போர் ஒருவகையில் ஓணான் அல்லது பச்சோந்தி போன்றது என விவரித்தார். காலம், இடம், சமூக-அரசியல் நிலைமைகளுக்கு ஏற்ப அதன் வடிவத்தை அது மாற்றியமைத்துக் கொள்கிறது. கால வளர்ச்சியில் போர் தொலைநோக்குள்ள வெவ்வேறு தோற்றங்களைப் பெறுகிறது. பண முதலைகளின் விளையாட்டு அரங்காக மாறுகின்றது.

மொத்தமாக போர்கள் அனைத்திலுமே அப்பாவிக் குழந்தைகள், பெண்கள், முதியோர், அங்கவீனர், மனநோயாளர் ஆகியோர் பெரும் எண்ணிக்கையில் கொல்லப்படுகின்றனர். இலட்சக் கணக்கில் இடம் பெயர்ந்தும் தமது பூர்வீக நிலத்திலிருந்து புலம் பெயர்ந்தும் சிதறுண்டு செல்கின்றனர். போருக்கு உதவும் நாடுகள் இதுபற்றி பெரிதும் அலட்டிக்கொள்வதில்லை. மனித அழிவின் கோரமான துயர் பற்றி, பேரிடர் பற்றி சிறிதும் எண்ணிப் பார்ப்பதில்லை. போரை ஊக்குவிக்க அவர்கள் அள்ளி வீசும் பணத்திற்கும் மனித துயர் துடைக்க வழங்கும் உதவிக்கும் இடையில் பாரிய இடைவெளி உண்டு.

யுத்த காண்டத்தை விரித்துப் பாடி போரையும் மானிட அழிவையும் முன்னிறுத்தி, போர் இலக்கியங்களையே பேரிலக்கியங்களாக தானறிந்த பன்மொழிகளில் கண்டுணர்ந்த கம்பன், தன் பெரும் கவிப் படைப்பில்

“யாரொடும் பகை கொள்ளலன் என்றபின்,
போர் ஒடுங்கும் புகழ் ஒடுங்காது” என்று அறிவுரை கூறினான்.

எல்லை அமைக்கப்பட்ட அக்காலப் போர்களில் இறந்தவர்கள் வில்லேந்திய வீரர்களே. இக்காலப் போர்களின் இழிநிலைகளையும் மானிட இடர்களையும் சுட்டிக் காட்டி, போர் ஒடுங்கும் துயர் ஒடுங்காது என அவனிடம் கூறத்தோன்றும்.



பிறேம் சிவகுரு - இங்கிலாந்து

# சமாதானத்துக்கு எதிரான உலக நாடுகளின் உதவி

## எல்லை கடந்த உலா

‘பவர் ப்ளே’ எனப்படும் சக்தி ஆட்டத்தின் முடிவுகளை சுயலாபங்கள்தான் தீர்மானிக்கின்றன என்ற கருத்தியல் இஸ்ரேலின் வரலாற்றில் மிகவும் அதிர்ச்சிகரமான தாக்குதலாக அமைந்த ஹமாசின் அதிரடிக்குப் பின்னர் உலக அரங்கில் எதிரொலிக்கின்றது.

140 சதுர மைல் பரப்பளவில் அடர்த்தியான குடிமக்கள் பரம்பலைக் கொண்ட காசா மீதான பாரிய படை நடவடிக்கைக்காக இஸ்ரேலிய ராணுவத்தின் 35 பட்டாலியன்கள் அதாவது படைப்பிரிவுகள் காசா எல்லையில் வரிசை கட்டி நின்றன.

போர்த்தாங்கிகள் மற்றும் கவசவாகனங்களின் அணிகளும் எல்லை தாண்டிய சில அதிரடி தாக்குதல்களும் எந்த வேளையும் காஸா மீதான ஒரு பெரியதரைப்படை நடவடிக்கையை இஸ்ரேல் ஆரம்பிக்கலாம் என்ற செய்தியை இந்த பதிவு பதியப்படும் போது கட்டியம்கூறியிருந்தன. (சில வேளைகளில் இந்த ஆக்கத்தை நீங்கள் காணும்போது அது ஆரம்பிக்கப்பட்டிருக்ககூடும்.)

இந்தப் படைநகர்வுக்கு முன்னோடியாக காசா மீதான வான்வழித் தாக்குதல்களை தயவு தாட்சணியம் இன்றி இஸ்ரேல் மூர்க்கத்தனமாக தொடர்ந்து தீவிரப்படுத்தியதால் காசா தற்போது இடிபாடுகளை கொண்ட பேய் நகரமாகிவிட்டது. இந்த ஆக்கம் எழுதப்படும் போது ஏழாயிரத்துக்கு மேற்பட்ட பலஸ்தீனர்கள் காவு கொடுக்கப்பட்டுள்ளனர்

மறுபுறத்தே இஸ்ரேலியத் தரப்பில் 1,500க்கு மேற்பட்ட மக்கள் பலியாகியுள்ளனர். 200 மேற்பட்டவர்கள் ஹமாசிடம் பணயகைதிகளாக சிக்கியுள்ளனர்

இஸ்ரேலை பொறுத்தவரை அது தனது படைத்துறையில் றிசேவிஸ்ற் எனப்படும் 300,000 துணைப்படையினரை திரட்டி காசா பகுதிக்கு அருகில் அணிவகுத்து நிற்பது ஏற்கனவே தெரிந்த விடயம். ஒப்பீட்டு ரீதியில் ஹமாசின் ஆயுதபலமும் இஸ்ரேலின் போர் இயந்திரத்தின் வலுவையும் ஒப்பிட்டுக்கொள்ள முடியாது.

இஸ்ரேலை பொறுத்தவரை அது உலகில் அதிக படை செலவீனத்தை கொண்ட நாடுகளில் ஒன்று. இஸ்ரேலின் ஆயுத இறக்குமதி அதன் ஆயுத ஏற்றுமதியை விட அதிகமாக இருப்பதாக கூறப்படுகிறது. 35 நாடுகள் இஸ்ரேலில் இருந்து ஆயுதங்களை இறக்குமதி செய்தாலும் இஸ்ரேலின் ஆயுத ஏற்றுமதி பட்டியலில் முதலிடத்தில் உள்ள நாடு இந்தியா என்பது ஆச்சரியத்துக்குரியது.

இந்தியா இஸ்ரேலின் இராணுவ ஏற்றுமதியில் மூன்றில் ஒரு பங்கு கொண்டுள்ளது. குறிப்பாக நரேந்திர மோடி ஆட்சிக்கு வந்த பின்னர் இந்த ஏற்றுமதி அதிகரித்தது. இஸ்ரேலை பொறுத்தவரை கடந்த ஆண்டில் மட்டும் அது தனது இராணுவத்திற்காக 23.4 பில்லியன் டாலர் செய்திருந்தது.

உலகின் இரண்டாவது பெரிய தனிநபர் இராணுவ செலவீன நாடு இஸ்ரேல். அங்கு ஒரு தனிநபர் மீது 2535 டொலர் இராணுவ செலவீனம் உள்ளது. கடந்த ஆண்டில், இஸ்ரேல் (ஜிடிபி) தனது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 4.5 சதவீதத்தை இராணுவ செலவீனமாக கொண்டிருந்தது.

இந்த இராணுவ தீனி அதன் முப்படைகளுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. இஸ்ரேல் 169,500 துருப்புகளை நிரந்தரமாகவும் 465,000 துருப்புகளை றிசேவிஸ்ற் எனப்படும் ஒதுக்கிய நிலையிலும் கொண்டுள்ளது. தற்போது காசா எல்லையில் அணிவகுத்து நிற்கும் இஸ்ரேலிய போர்த்தாங்கிகள் உட்பட அதன் தரைப்படையில் மொத்தமாக 2,200 போர்தாங்கிகளும் பல்குழல் ஏவுகணை செலுத்திகள் உட்பட்ட 530 பீரங்கி அலகுகளும் உள்ளன.

இதேபோல இஸ்ரேலிய வான்படையும் வலிமையானது அதனிடம் 309 தரை தாக்குதல் போர் விமாங்கள் உட்பட 339 போர் விமானங்கள் உள்ளன. இதில் 196 F-16 கலங்களும் 83 F-15 ரக விமானங்கள் 30 F-35 கலங்களும் அடங்குகின்றன. ஜெரிகோ ஏவுகணைகள் மற்றும் அணு ஆயுதங்களை சுமந்து செல்லும் திறன் கொண்ட விமானங்கள் இஸ்ரேலிய வான்படையில் இருப்பது மறைவான விடயமல்ல. இவற்றைவிட இஸ்ரேலிய வான்படையில் 43 அப்பாச்சி தாக்குதல் உலங்குவானுர்திகள் உட்பட 142 உலங்குவானுர்திகள் உள்ளன.

அடுத்து வரும் கடற்படையும் தரைப்படை மற்றும் வான்படைக்கு சளைக்காத அளவில் தனத பலத்தை கொண்டுள்ளது. 5 நீர்மூழ்கிக் கப்பல்கள் மற்றும் 49 போர்க்கலங்கள் அதனிடம் உள்ளன. இவ்வாறான முப்படை வலுவுக்கு அப்பால் இன்னொரு நட்சத்திர வலுவாக அதன் அயர்ன் டோம் எனப்படும் இரும்பு குவிமாட ஏவுகணை எதிர்ப்பு கட்டமைப்பு உள்ளது.

ரேடார் தொழில்நுட்பத்தை பயன்படுத்தி எதிரிகன் ஏவும் குறுந்துார உந்துகணைகளை இடைமறித்து அழிக்க அமெரிக்காவின் உதவியுடன் உருவாக்கப்பட்ட இந்த அயன் டோம் 90 சதவீதத்திற்கும் அதிகமான உந்து கணைகளை இடைமறித்து அழிப்பதால் இன்றுவரை அது நட்சத்திர வலுவாக உள்ளது

ஹெஸ்பொல்லாக்களுடான போரில் ஆயிரக்கணக்கான உந்துகணைகள் இஸ்ரேலில் ஏவப்பட்ட பின்னர் 2006 இல் இந்த அயன் டோம் உருவாக்கப்பட்டது, இந்த அயர்ன் டோமுக்குரிய ஏவுகணைகள் மற்றும் பாகங்களை வழங்குவது அமெரிக்காவின் பொறுப்பாகும்.

அந்த வகையில் ஹமாசின் உற்துகணை தாக்குதலுக்கு எதிராக அயர்ன் டோமிலிருந்து பயன்படுத்தப்பட்ட ஆயுதங்களை மீண்டும் நிரப்பி வழங்குவதாக அமெரிக்கா உறுதியளித்தது போலவே ஆயுதங்கள் சென்றடைந்துவிட்டன.

இதுமட்டுமல்ல - இஸ்ரேலுக்கு ராணுவ உதவிகளை அள்ளிக்கொடுக்கும் நாடுகளின் பட்டியலில் 1946 இல் இருந்து அமெரிக்காவே முதலிடத்தில் உள்ளது.

அன்று முதல் இன்று வரை 263 பில்லியன் டொலர் இராணுவ உதவியை அமெரிக்காவிடம் இருந்து இஸ்ரேல் பெற்றுள்ளது. மத்திய கிழக்கில் தனது நலன்களைப் பாதுகாக்க தாவீது நட்சத்திர நாடு உதவுவதால் இந்த உதவியும் தாராளமாக அதற்கு கிட்டிக்கொள்கிறது. ஆனால் இந்த உதவி சமாதானத்துக்குப் பயன்படவில்லை என்பதுதான் மிகப்பெரிய சோகம்.

# கனடிய தமிழர் தேசிய அவை அவசர வேண்டுகோள்:

# தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் மசோதா 104ஐ பாதுகாப்போம்!

## டிசம்பர் 4ம் திகதி மேல்முறையீட்டு நீதிமன்ற விசாரணை

ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் ஜூன் 28, 2022ல் மசோதா 104ஐ உறுதிப்படுத்தி வழங்கிய தீர்ப்பை எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்கள் செய்திருந்த மேல்முறையீட்டுக்கான விசாரணை எதிர்வரும் டிசம்பர் 4, 2023ல் ஒன்ராறியோ மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் நடைபெறவுள்ளது.

மசோதா 104 தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரச் சட்டம் 2021, மூன்றாம் வாசிப்பை அடுத்து, அனைத்துக் கட்சிகளின் அனைத்துப் பாராளுமன்ற உறுப்பினர்களின் முழு ஆதரவுடன், ஏகமனதாக நிறைவேற்றப்பட்டு, மே 12, 2022ல் ஒன்ராறியோ மாகாணத்தின் சட்டமாக ஆக்கப்பட்டது.

ஒவ்வொரு ஆண்டிலும் மே 18ம் நாளன்று முடிவடையும் ஏழு நாட்களும் தமிழின அழிப்பு அறிவூட்டல் வாரம் என இச்சட்டம் பிரகடனப்படுத்துகின்றது. இந்த வாரத்தில் ஒன்ராறியோவாழ் மக்கள் தமிழின அழிப்பு பற்றியும், உலக வரலாற்றில் நிகழ்ந்தேறியுள்ள மற்றைய இன அழிப்புகள் பற்றியும் கற்பதோடு, அவை பற்றிய விழிப்புணர்வையும் ஊக்குவிப்பர்.

மசோதா 104 நிறைவேற்றப்பட்டமை உலகெங்கணும் பரந்து வாழ்கின்ற தமிழ் மக்களுக்கு வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாகும். ஓர் அரசாங்கம் தமிழின அழிப்பு பற்றிய அறிவூட்டலை மேற்கொள்வதற்காக மசோதா ஒன்றை உருவாக்கியது இதுவே முதல் தடவையும் ஆகும்.

இச்சட்டம் நிறைவேற்றப்பட்டதன் சிறிது காலத்தின் பின்னர் தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104க்கு எதிராக அரசியலமைப்புச் சவால் ஒன்றைத் தொடுத்தனர். மசோதா 104ஐ பாதுகாக்கவும், தமிழின அழிப்பை மறுப்பவர்களை எதிர்த்து நடவடிக்கை எடுக்கவும் 60க்கும் மேற்பட்ட அமைப்புக்களின் ஆதரவுடன் கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT), கனடியத் தமிழ் இளையோர் ஒன்றியம் (CTYA) மற்றும் கனடாத் தமிழ்க் கல்லூரி (CTA) கூட்டாக இடையீட்டாளர்களாகத் தமது பக்க நியாயத்தை நீதிமன்றத்தில் சமர்ப்பிக்க முன்வந்து செயல்பட்டனர். மசோதா 104ன் முக்கியத்துவத்தைச் சட்டரீதியில் இடையிட்டு வாதிடுவதற்கு Goldblatt Partners எனும் சட்ட நிறுவனத்தை தமிழ் கனடிய சமூகம் அமர்த்தியது. இந்த வழக்கின் இறுதியில் மசோதா 104 தமிழின அழிப்பு கல்விவாரச் சட்டம் 2021, ஜூன் 28, 2022ல் ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் உறுதிப்படுத்தப்பட்டு தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104க்கு எதிராகச் தொடுத்த அரசியலமைப்புச் சவால் நிராகரிக்கப்பட்டது.

எனினும், ஜூன் 28, 2022ல் ஒன்ராறியோ உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட மசோதா 104 பற்றிய நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து தமிழின அழிப்பு மறுப்பாளர்கள் ஒன்ராறியோ மேல்முறையீட்டு நீதிமன்றத்தில் மீண்டும் மேல்முறையீடு செய்துள்ளனர். மசோதா 104ன் முக்கியத்துவத்தைச் சட்டரீதியில் இடையிட்டு வாதிடுவதற்கு Goldblatt Partners எனும் சட்ட நிறுவனத்தை கனடியத் தமிழர் தேசிய அவை (NCCT), கனடியத் தமிழ் இளையோர் ஒன்றியம் (CTYA) மற்றும் கனடா தமிழ்க் கல்லூரி (CTA) கூட்டாக தமிழ் மக்கள் சார்பில் மீண்டும் அமர்த்தியுள்ளது.

இனஅழிப்பு புரிவோர் அதனை எப்போதும் மறுப்பார்கள் என்பதனை வரலாறு எமக்கு மீண்டும் மீண்டும் புகட்டி வருகின்றது. தமிழின அழிப்பு மறுப்பாளர்கள், மசோதா 104ஐக் குறிவைத்து அதை இல்லாமல் செய்ய மீண்டும் மீண்டும் வேண்டுமென்றே முயற்சிப்பது, அவர்கள் தமிழின அழிப்பால் பாதிக்கப்பட்டவர்களை மௌனமாக்குவதற்கு முனைப்போடு செயற்படுகின்றார்கள் என்பதைக் எடுத்துக் காட்டுகின்றது.

இனஅழிப்பில் இருக்கும் 10 படிநிலைகளில் அதனை மறுத்தலே கடைசிப் படிநிலையாகும். இந்தப் படி நிலையானது பொதுவாக இனஅழிப்பு நடந்து கொண்டிருக்கும்போதும், அது நடந்து முடிந்த பின்பும் தொடர்வதை அவதானிக்கலாம். அத்தோடு எதிர்காலத்தில்கூட மீண்டும் ஒருமுறை இந்த குறிப்பிட்ட மக்களுக்கு எதிரான ஓர் இனஅழிப்பு நடைபெறலாம் என்பதை எடுத்துக் காட்டவல்ல சிறந்த குறிகாட்டியாகவும் இந்தப் படிமுறை உள்ளது.

தமிழின அழிப்பு பற்றிய அறிவூட்டலை மேற்கொள்வதற்காக முதல் முதலாக உருவாக்கப்பட்டுள்ள இந்த மசோதாவை பாதுகாப்பதற்கு எல்லோரும் ஒன்றுபடுவோம்.

இந்த மசோதா 104ஐ பாதுகாக்க இடையீட்டாளர்களாக வாதாட நாம் எடுத்துள்ள முயற்சிக்கு வேண்டிய வழக்கு செலவுக்கு பல்வேறு வேலைத் திட்டங்கள் ஊடாகவும் பல்வேறு தளங்கள் ஊடாகவும் இதுவரை நிதி உதவி வழங்கியுள்ள தனிநபர்களுக்கும் வியாபார நிறுவனங்களுக்கும் அமைப்புகளுக்கும் எமது நன்றிகளை தெரிவித்துக்கொள்கின்ற அதேவேளை, தொடர்ச்சியாக ஏற்பட்டுக் கொண்டிருக்கின்ற இந்த வழக்குச் செலவுக்கு உங்களது தொடர்ச்சியான நிதிப் பங்களிப்பை எதிர்பார்த்துக் காத்திருக்கின்றோம்.

பின்வரும் வழிகளில் உங்களது பங்களிப்பை வழங்கலாம்:

GoFundMe:
https://www.gofundme.com/f/defend-bill-104

E-transfer:
Bill104@ncctcanada.ca

Cheque payable to: National Council of Canadian Tamils

Address:
305 Milner Avenue,
Unit # 307, Toronto, ON.
M1B 3V4. Canada



எஸ். ராஜ்மோகன்

## பணிலமாடம் - 73

# பிரமாண்டமான நீர் சுத்திகரிப்பு நிலையம்

இலங்கையிலிருந்து சுற்றுலாவுக்காக கனடா வருவோரை, முக்கியமான பல இடங்களுக்கு அழைத்துச் செல்வது வழமை. நயகரா நீர்வீழ்ச்சி, சி.என். ரவர், கியூபெக் நகரம் என்று இந்த இடங்களை அடுக்கிக் கொண்டே போகலாம். கடந்த மாதம் யாழ்ப்பாணத்தில் இருந்து வந்த எனது அண்ணாவை பல இடங்களுக்கு அழைத்துச் சென்றாலும், ஓர் இடம் மட்டும் மிகவும் வித்தியாசமான அனுபவத்தைத் தந்தது. மானிப்பாய் இந்துக் கல்லூரியின் அதிபராக இருக்கும் அண்ணாவுடன், என்னையும் அக் கல்லூரியின் பழைய மாணவரான மதன் கருணாரட்ணம் அந்தப் பிரமாண்டமான இடத்திற்கு அழைத்துச் சென்றார்.

ஆர். சி. ஹாரிஸ் நீர் சுத்திகரிப்பு நிலையம்தான் இந்தப் பிரமாண்டமான இடம். ஒன்ராறியோ ஏரியின் ஓரத்தில் ஒரு கோட்டை போல விரிந்து நிற்கும் இந்த வரலாற்றுச் சின்னம், ஒரு சாய்வான 19 ஏக்கர் பரந்த புல்வெளி நிலப்பரப்பில் அமைந்துள்ளது. 2701 Queen Street East, Toronto வில் உள்ள இந்த நிலையம், ரொறன்ரோவில் உள்ள மிகப்பெரிய நீர் சுத்திகரிப்பு நிலையம் என்ற பெயரையும் பெற்றுள்ளது. வரலாறு கூறும் அழகிய கட்டடம், அதன் உள்ளே பாத்திகள் போன்றிருக்கும் விசாலமான நீர் வடிகட்டும் பேசின்கள், நீரை ஏரியில் இருந்து உள்வாங்கி வெளியே அனுப்பும் பெரிய பம்புகள், நீரைத் தொடர்ச்சியாகக் கடத்தும் பெரும் குழாய்கள் என்று எல்லாமே ஆச்சரியப்படுத்தின.

1837ஆம் ஆண்டு ரொறன்ரோ நகரம் முதல் முதலாக ஏரியில் இருந்து நீர் வழங்கும் சேவையை ஆரம்பித்தது. தனியாரினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த இந்த நீர் விநியோகம் 1873 களில் உள்ளூராட்சி சபையின் கட்டுப்பாட்டுக்குள் வந்தது. பின்னர் 1930ஆம் ஆண்டு ஆணையாளராக இருந்த ஆர்.சி. ஹாரிஸ் அவர்களின் நேரடி நிர்வாகத்தில் பதினைந்து மில்லியன் செலவில் இந்த நீர் சுத்திகரிப்பு நிலையத்தின் கட்டுமானம் 1932ஆம் ஆண்டு ஆரம்பித்து 1941ஆம் ஆண்டு நிறைவுபெற்றது.

அற்புதமாக வடிவமைக்கப்பட்டிருக்கும் இந்த நிலையத்தில், நீர் சுத்திகரிக்கும் பிரிவு, சேவைப் பிரிவு மற்றும் பம்பிங் ஸ்ரேஷன் ஆகிய மூன்று முக்கிய கட்டடங்கள் உள்ளன. இந்தக் கட்டடங்கள் அழகான வளைவு ஜன்னல்களுடன், தட்டையான வடிவியல் அலங்காரம் போன்ற அதிநவீன அழகியல் அமைப்புக்களைக் கொண்டு கட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. 1992ஆம் ஆண்டில் கனேடிய தேசிய வரலாற்று சிவில் பொறியியல் தளமாக அடையாளப்படுத்தப்பட்டது. ஆறு ஆண்டுகளுக்குப் பின்னர், ரொறன்ரோ நகரசபை ஒன்ராறியோ மரபுச் சட்டத்தின் கீழ் இந்த இடத்தை வரலாற்றுத் தளமாகப் பிரகடனப்படுத்தியது.

ஒன்ராறியோ ஏரியில் சுமார் 2.3 கி.மீ. தொலைவிலும், 15 மீற்றர் ஆழத்திலும் உள்ள உள்வாங்கும் கலத்தில் இருந்து எடுக்கப்படும் மூல நீரில் குளோரின் சேர்க்கப்பட்டு பெரும் குழாய் மூலம் இந்த நிலையத்திற்குக் கொண்டுவரப்படுகின்றது. உள்வாங்கும் கலனில் இருக்கும் திரைகள் பெரிய கழிவுகளை அகற்றும் வேலையைச் செய்யும். பின்னர் பம்பிங் ஸ்ரேஷன்களில் உள்ள பம்புகள் மூலம் நீர் வடிகட்டும் கட்டடத்திற்கு அனுப்பப்படுகின்றது. நீர் சுத்திகரிப்பு தொடங்க குளோரின் மற்றும் படிகாரம் எனப்படும் Alum சேர்க்கப்படுகிறது. குழாய்களின் சுவரில் Orthophosphate மூலம் மெல்லிய படலங்களை உருவாக்கி ஈயம் கடத்தப்படுவது தடுக்கப்படுகின்றது. பகுதியாக சுத்திகரிக்கப்பட்ட நீர் பின்னர் பல மணி நேரம் பாத்திகள் போன்றிருக்கும் நீர் தேங்கும் பேசின்களில் விடப்பட்டு, அழுக்குகள் கீழே படிந்து வெளியேற அனுமதிக்கிறது.

அதன் பின்னர் நீர் வடிகட்டப்பட்டு, குளோரின், பொஸ்பேட் மற்றும் அம்மோனியா போன்றவை சேர்க்கப்பட்டு விநியோகத்திற்குத் தயாராகி எமது வீடுகளுக்கு வந்து சேருகின்றது.

ஆரம்பத்தில் 'விக்ரோறியா பார்க் நீர் சுத்திகரிப்பு நிலையம்' என்ற பெயரில் இயங்கி வந்த இந்த நிலையம், ஆர்.சி. ஹாரிஸ் அவர்களின் சேவை நலன் கருதி 'ஆர்.சி. ஹாரிஸ் நீர் சுத்திகரிப்பு நிலையம்' எனப் பெயர் மாற்றம் கண்டது. இந்த நிலையம் ஒவ்வொரு ஆண்டும் ரொறன்ரோவிற்கு 168,000 மில்லியன் லிட்டர் நீரை சுத்திகரித்து வழங்குகிறது. ரொறன்ரோ நகரத்தின் மொத்த நீர் விநியோகத்தில் சுமார் 33 சதவீதமான தேவையை இந்த நிலையம் பூர்த்தி செய்கின்றது.

அத்துடன் ஒரு நாளைக்கு 950 மில்லியன் லிட்டர் நீரை உற்பத்தி செய்யும் திறனும் கொண்டது. 365 நாட்களும் கண்காணிக்கப்படும் இந்த நிலையம், ஒரு வருடத்திற்கு 6000 தடவைக்கு மேல் நீர் பரிசோதனை செய்யப்பட்டு உறுதி செய்யப்படுகின்றது. வீடுகளில் சராசரியாக ஒரு போத்தல் குழாய் நீரை நாம் நிரப்புவதற்கு ஒரு சதத்திற்கும் குறைவான செலவே ஏற்படுகின்றது.

இங்கிருக்கும் பரிசோதனைக் கூடமொன்றில் ஏரியில் உள்ள சுத்திகரிக்கப்படாத நீர், ஒவ்வொரு சுத்திகரிக்கும் செயன்முறைகளில் இருந்து வெளிவரும் நீர் என்று தனித்தனியாக குழாய்களில் தொடர்ச்சியாக ஓடிக்கொண்டே இருக்கும். கண்ணாடிக் குவளையில் அவற்றை நிரப்பிப் பார்த்தால் ஏரி நீருக்கும், நாம் அருந்தும் நீருக்கமான வித்தியாசம் தெரியும்.

இந்த கட்டடங்களின் வெளிப்புறங்களுக்கு செல்வதற்கான அனுமதி எப்பொழுதும் உண்டு. ஆனால், கட்டடத்தின் உட்பகுதிகளையும், அங்கேயிருக்கும் பிரமாண்டமான வடிகட்டும் பேசின்களையும், சுத்திகரிக்கும் செயன்முறைகளையும் பார்வையிடுவதற்கு வருடத்தில் இரு நாட்கள் மட்டுமே மக்களுக்கு அனுமதி வழங்கப்படுகின்றது.

2024ஆம் ஆண்டின் ரொறன்ரோ நகர கதவு திறக்கும் நாட்களான மே மாதம் 25-26 ஆம் திகதிகளில் இலவசமாக இந்த பிரமாண்டத்தைக் காண முடியும்.



கனகேஸ்வரி நடராஜா

# பணத்தின் பரிமாணங்கள்

மளிகைக் கடைக்காரர் ஒருவரிடம் பொருட்களை வாங்கிய பின்னர் ஒருவர் நூறு ரூபா தாளை கொடுத்துவிட்டு மிகுதிச் சில்லறையை வாங்கிக் கொண்டு போகிறார் ஒருவர். அந்த மளிகைக் கடைக்காரர் ஒரு தையல் கடைக்காரருக்கு கொடுக்க வேண்டியிருந்த கடனை அடைக்க அந்த நூறு ரூபா நோட்டைக் கொடுக்கிறார். அந்தத் தையல் கடைக்காரர் மருந்துக் கடையில் வாங்கியவற்றுக்கு பணமாக நூறு ரூபா தாளைக் கொடுத்து தனது பிரச்சனையைத் தீரக்கிறார். மருந்துக் கடைக்காரர் தனது மகனின் ரியூசன் ஆசிரியருக்கு சம்பளக் கணக்கால் அந்த நோட்டைக் கொடுக்கிறார். அந்த ரியூசன் ஆசிரியர் அதே பணத்தை மளிகைக் கடையில் கொடுத்து பொருட்களை வாங்குகிறார்.

அடுத்து அந்த மளிகைக் கடைக்காரர் வங்கியில் வைப்பிலிட அதனை எடுத்துச் செல்கிறார். அந்த நூறு ரூபா தாள் கள்ள நோட்டு என்பதை கண்டுபிடிக்கிறார். அத்தோடு அந்த நூறு ரூபாய் செல்லாக் காசாகிறது. அதன் பிரயாணம் முடிவடைகிறது.

எத்தனையோ பேரின் பிரச்சனைகளையும் தேவைகளையும் பூர்த்தி செய்த அந்தத் தாள் ஒரு கணத்தில் கள்ள நோட்டு என்ற பட்டப் பெயரோடு வெற்றுக் கடதாசியாகிறது. பணத்தின் பெறுமதிக்கு இதனைவிட வேறு என்ன உதாரணம் வேண்டும்.

இந்தப் பணமானது சந்தர்ப்பங்களுக்கேற்ற - வாறும் தேவைகளுக்குத் தக்கவாறும் பல பெயர்களில் அழைக்கப்படுகிறது. இதன் பலவிதமான பரிமாணங்களை விளக்கும் ஒரு பதிவை கணினியில் பார்த்தேன். அதனையே தமிழர் தகவல் வாசகர்களுடன் பகிர்கிறேன்.

ஒருவர் தனது பணத்தை கோவில் உண்டி - யலில் போட்டால் அதன் பெயர் காணிக்கை. ஓர் ஏழை நம்மிடம் யாசிக்கும்போது அது பிச்சை என அழைக்கப்படுகிறது. கோவிலில் அர்ச்சகரின் தட்டில் இடப்படும்போது அது தட்சணை எனப் பெயர் பெறுகிறது. கல்வி கற்கும் பாடசாலைக்குச் செலுத்தப்படும் பணம் கட்டணமாகிறது. திருமணத்திற்காக வழங்கப் - படும் பணம் வரதட்சணை என பெயர் சூட்டப்படுகிறது. ஆனால், மணவிலக்கு ஏற்படுமிடத்து நீதிமன்ற கட்டளைப்படி கணவனால் மனைவிக்கு வழங்கப்படும் பணம் ஜீவனாம்சம் எனப் பெயர் பெறுகிறது. ஏதாவது விபத்தில் ஒருவர் அகப்படுமிடத்து அவருக்கு வழங்கப்படும் பணம் நஷ்டஈடு எனப்படுகிறது.

ஏழை ஒருவர் வந்து எம்மிடம் பணம் கேட்கும்போது "தர்மம் தாருங்கள்" என்கிறார்.

ஆனால், ஒரு ஏழைக்கு நாமாகவே மனமிரங்கிக் கொடுக்கும் பணத்தை தானம் என அழைக்கிறோம். திருமண வீட்டில் அன்பளிப்பாகக் கொடுக்கும் பணத்தை மொய் என்பர். ஒருவர் திருப்பித் தருவேன் எனக்கூறிப் பெறுவது கடன் எனப்படுகிறது. அவர் திருப்பித் தர தேவையில்லை என நாம் கொடுக்கும்போது அது அன்பளிப்பாகிறது. தான தர்ம கைங்காரியங்களுக்கு நாம் விரும்பி வழங்குவது நன்கொடையாகும்.

ஒருவர் செய்த குற்றத்துக்காக நீதிமன்றத்தினால் விதிக்கப்படும் தொகை அபராதம் எனப்படும். அரசாங்கம் எமது வருமானம், சொத்து முதலியவற் - றுக்காக வசூலிக்கும் பணம் வரி எனப்படும். அரசாங்க, பொது நிறுவனங்கள் வைத்திருக்கும் பணத்தை நிதி என்கிறோம். ஒரு உத்தியோகத்தருக்கு அல்லது பணியாளருக்கு வழங்கப்படுவது சம்பளம். ஆனால் அதுவே ஒரு தொழிலா - ளிக்கு வழங்கப்படும்போது கூலி என பெயர் மாறுகிறது.

ஒருவர் தான் பார்த்த தொழிலிலிருந்து ஓய்வு பெற்ற பின்னர் அவருக்கு வழங்கப்படும் பணத்தை ஓய்வூதியம் என்போம். ஒருவர் பணியிலிருக்கும் வேளையில் சட்டத்துக்குப் புறம்பாக பெறும் பணம் கையூட்டல் (லஞ்சம்) ஆகும்.

ஒருவரிடம் நாம் கடன் வாங்கும் பொழுது அந்தப் பணத்தை அசல் என அழைக்கிறோம். அப்பணத்துக்காக நாம் மேலதிகமாக வழங்குவதை வட்டி என்கிறோம். ஒருவர் தொழில் ஆரம்பிக்கும்போது அதற்காக செலவிடும் பணம் முதலீடு எனக் கூறப்படுகிறது. குருவுக்கு வழங்கப்படும் பணம் குருதட்சணை என பெயர் பெறுகிறது. ஹோட்டலில் சாப்பிட்ட பின்பு கொடுக்க வேண்டிய பணத்துக்கு மேலதிகமாக வழங்கப்படும் சேவைப்பணத்தை 'ரிப்ஸ்' என்கிறோம். இது ஓர் ஆங்கிலச் சொல்.

பணத்திற்காக உச்சரிக்கப்படும் பல்வேறு பட்ட பெயர்ப் பட்டியலை ஒரே மூச்சில் இங்கு பார்த்தோம். இவற்றைவிட வேறு பயன்பாடுகளும் அவற்றுக்கான சொற்றொடர்களும் இன்னும் இருக்கலாம். இத்தனை சொற்களுக்கும் பொருத்தமான ஆங்கிலச் சொற்களை கண்டுபிடிப்பது சுலபமான விடயமல்ல. பணம் என்ற சொல் தமிழில் பல்வேறு விதமான பரிமாணங்களை எடுத்துள்ளது என்பதனைப் பார்க்கும்போது தமிழ் மொழியின் செந்தமிழ்ச் சிறப்பினை உணர முடிகிறது.

பணம் பலவிதமான பாதிப்புகளையும்கூட ஏற்படுத்துகிறது. சில சந்தர்ப்பங்களில் பண உதவியை நாடிச் சென்று அது கிடைக்காதவிடத்து அதனை தராதவர்கள் மேல் வைத்திருக்கும் அன்பை இழக்கிறோம். அதேசமயம் ஒருவரிடம் கடன் கேட்பதால் அவர் எங்கள் மேல் வைத்திருக்கும் மரியாதையை இழக்கிறோம். பணப்பிரச்சனைகளால் உறவுகளுக்குள்கூட பகைமை ஏற்படுகிறது. பெற்ற கடனை திருப்பிக் கொடுக்க முடியாத வேளைகளில் கண்ணியம் இழக்கப்படுகிறது. பணம் சம்பாதிக்கும் ஆசையால் தவறான வழிகளைப் பின்பற்றி மனிதநேயம் இழக்கப்படுகிறது.

சம்பாதிக்கும் ஆசையால் சிலர் தமது வாழ்க்கையையே தொலைத்துவிடுகிறார்கள். அத்தனை வலிமை வாய்ந்த பணம் இல்லாவிட்டால் வாழவே முடியாது என்பதை "அருள் இல்லார்க்கு அவ்வுலகம் இல்லை, பொருள் இல்லார்க்கு இவ்வுலகு இல்லாகியாங்கு" என்ற ஈரடிகளால் தெய்வப் புலவர் திருவள்ளுவர் கூறியுள்ளார்.



இரா. சம்பந்தன்

# கான முயலும் ஈழ நிலமும்!

அவர்கள் வேடுவர்கள். அவர்களின் வீடு காட்டை எல்லையாகக் கொண்ட ஒரு கிராமத்தில் இருந்தது. வேட்டையாடுதல் அம் மக்களின் குலத்தொழிலாக இருந்தாலும் சிலர் மட்டும் விலங்குகளை மட்டுமல்ல போர் முனையில் எதிரிகளையும் வேட்டையாடக்கூடிய வில்லாளிகளாக இருந்தார்கள். அவர்கள் வீரம் ஊர் கடந்து நாடு முழுவதும் பேசு பொருளாக இருந்தது.

அப்படிப்பட்ட வீரர்களை அரசு கண்டுகொள்ளாமல் விட்டுவிடுமா. அரச தூதுவர்கள் ஒரு குடும்பத்தில் இருந்த அண்ணனுக்கும் தம்பிக்கும் வலை விரித்தார்கள். அந்த வலையில் தம்பி மாட்டிக் கொண்டான். அண்ணனோ போர் முனை துளியும் விருப்பமில்லை என்று மறுத்துவிட்டான். மறுத்தது மட்டுமல்ல. தம்பி அரண்மனைப் படையில் சேர்ந்ததற்கு வீட்டில் உள்ளவர்களையும் குறை கூறி வந்தான்.

எங்களுக்கென்று காடு இருக்கின்றது. அதிலே வாழும் மிருகங்களையும் பறவைகளையும் தேவைக்கு ஏற்றவாறு வேட்டையாடி மனைவி பிள்ளைகளோடு உண்டு உறங்கி நிம்மதியாக வாழத் தெரியாமல் அரன்மனைப் படையில் இணைந்து ஏன் வீணாக உயிரை விட வேண்டும்.

சாவின் முடிவிலே கொண்டு சென்று நிறுத்துகின்ற ஒரு வேலைக்கு குதிரை கவசங்கள் வில் வாள் வேல் என்ற ஆயுதங்கள். என்ன பிழைப்பு இது ஏதோ செய்து முடியுங்கள். தினமும் வேட்டைக்குப் புறப்படும் முன் தன் பெற்றோருக்கும் தம்பின் மனைவி பிள்ளைகளுக்கும் அண்ணன் செய்கின்ற அருச்சனை இது.

பொழுது சாயம் நேரம் தோளில் தொங்கும் மான் முயல் பன்றி போன்றவற்றின் உயிரற்ற உடல்களோடும் வலையில் சிக்கிய பறவைகளோடும் காய் கனி தேன் நிரம்பிய கூடையோடும் வீட்டுக்கு வரும் அண்ணனைத் தம்பியின் மனைவி பார்ப்பாள். இதுவல்லவோ நிம்மதியான வாழ்க்கை என்று நினைக்கும் அவள் மனம்.

இருக்கிறானோ இல்லை இறந்து விட்டானோ என்ற முடிவும் தெரியாமல் தவித்து பல நாடகள் தவமிருந்து எப்போதாவது வேலும் குதிரையுமாக வந்துவிட்டுப் போகும் தன் கணவனை எண்ணிப்பார்ப்பாள் அவள். படை வேலை வேண்டாம் அண்ணனைப் போல காடடிலே வேட்டையாடிக் கொண்டு வீட்டிலேயே இருந்துவிடுங்கள் என்று பல முறை மன்றாடிப் பார்த்தாள் அவள். எதுவும் எடுபடவில்லை.

ஒருநாள் மாலை தன் சிறிய அம்புககளை கருங்கல்லிலே தீட்டிக் கொண்டிருந்தான் அண்ணன். அங்கே வந்த தம்பி அண்ணா இந்த வேலையும் தீட்டி முனையிலே நெய் பூசிக் கொடு என்றான். அதைக் கையிலே வாங்கிய அண்ணன் இது தான் வேலாயுமா இந்தக் கனம் கனக்குதே. இதை வைத்துப் போரிலே என்ன செய்வாய் என்று கேட்டான்.

அண்ணா போரிலே இந்த வேல்கள் யானைகள் மீது எறிந்து அவற்றை வீழ்த்துவதற்காகச் செய்யப்பட்வை. அது தான் இவ்வளவு கனமாக இருக்கின்றது என்றான் தம்பி. ஓ அப்படியா இதுவரை போரிலே எத்தனை யானைகளை இந்த வேலினால் கொன்றிருப்பாய் என்று கேட்டான் அண்ணன்.

பல முறை பல யானைகள் மீது இந்த வேலை எறிந்திருக்கின்றேன். அந்த யானைகள் எல்லாம் போர்ப் பயிற்சி பெற்றுக் கவசம் தரித்தவை ஆகையால் தப்பித்துப் போய்விட்டன. பரவாயில்லை. என்றோ ஒருநாள் என் வேல் ஒரு யானையையாவது வீழ்த்தும் அந்த நம்பிக்கை எனக்கு உண்டு என்றான் அந்தத் தம்பி.

அண்ணன் ஏளனமாகச் சிரித்தான். நான் வில்லை வளைத்து ஏதாவது ஒன்றுக்குக் குறி வைத்தால் என் அம்பு தவறிப் போவது என்பது சரித்திரத்தில் கிடையாது .அப்படியிருக்க எனக்குத் தம்பியாகப் பிறந்து யானைக்கு எறிந்து குறிதவறிப் போன வேலை தோளிலே சுமக்கிறேன் என்று சொல்ல உனக்கு வெட்கமாக இல்லையா?

உன்னுடைய சிறிய அம்பு துளைத்துச் செத்துப் போக யானை என்ன பன்றியா முயலா என்றான் தம்பியும் விடாமல். வார்த்தைகள் முற்ற ஊரவர்கள் கூடி இருவரையும் சமாதானம் செய்து வைத்தார்கள். அந்தக் கூட்டத்திலே திருவள்ளுவரும் இருந்தார். அவர் எதுவுமே பேசவில்லை. அண்ணன் தம்பி இருவருடைய வார்த்தைப் பிரயோகங்களையும் கேட்டுக்கொண்டு இருந்தார்.

இந்த வேட்டுவர்கள் உரையாடல் எனக்கு மிகச்சிறந்த ஒரு செய்தியினைத் தெரிவிக்கின்றது. ஒரு மனிதன் தனக்கு எந்த வகையிலும் சமானமில்லாத ஒரு அப்பாவி எதிரியை ஏமாற்றி அழித்து வென்ற ஆயதத்தை கையிலே வைத்திருப்பதை விட தன்னைவிடப் பலமடங்கு பலம் பொருந்திய ஒரு எதிரியோடு போராடித் தோற்றுப் போன ஆயுதத்தை கையிலே வைத்திருப்பது தான் மனதுக்கு இனிமையான செயலாக இருக்கும்.

தோல்வி வேறு விடயம். ஆனால் பலம் பொருந்தியவர்க - ளுடன் தான் போராடினோம் என்ற நிறைவு கிடைக்குமே. காட்டிலே வாழும் முயலை குறி தவறாது எய்து கொன்ற அம்பை விட யானைக்கு முன்னாலே நின்று எறிந்த வேல் குறிதவறிப் போனாலும் அதுதான் உயர்ந்தது என்று உதடுகள் உரைக்க ஏட்டையும் எழுத்தாணியையும் வள்ளுவர் கைகள் எடுக்கின்றன. அங்கே எழுநூற்று எழுபத்து இரண்டாவது குறள் பிறக்கின்றது.

கான முயல் எய்த அம்பினில் யானை

பிழைத்த வேல் ஏந்தல் இனிது.

வள்ளுவர் சொன்ன இந்தக் குறள் கார்த்திகை மாதத்தில் கனத்த மனத்தோடு இருக்கும் ஈழ தேசத்துக்கும் பொருந்தும். போரிலே தோற்றுவிட்டோம் தான். ஆனால் நாங்கள் வல்லரசுகளாக இருந்து கொண்டு வசதிகளும் சமானமும் இல்லாத சிறிய நாடுகளைத் தாக்கி வெற்றி பெற்று மகிழவில்லை. மாறாக சிறிய தேசத்தில் இருந்து கொண்டு பலமடங்கு பலம் பொருந்திய எதிரிகளோடு போராடினோம்.

எமது கையிலே இருக்கும் ஆயுதம், கான முயலுக்கு எய்த அம்பு அல்ல, யானைக்கு எறிந்து தவறிப்போன வேல் என்று பெருமை கொள்வோம்.



பொன்னையா விவேகானந்தன்

# மரபும் மாண்பும் 40

## கூட்டு வாழ்வெனும் பேரறம்

உலகளாவிய மானுடகுலத்தின் உயர் பண்பு, கூடி வாழ்தல் என்ற ஒப்புயர்வற்ற நடத்தையே. மானுடகுலம் தோற்றம் கொண்ட நாள்முதல் இன்றளவில் பெற்றிருக்கும் உலகின் உயர் வளர்ச்சியின் அடிப்படை கூட்டு வாழ்வியல் இயக்கமே என்பதை எவரும் மறுக்கார்.

அதிகாரம், சுதந்திரம், பொருளாதாரம் என்ற தளங்களில் மானுடகுலத்திடையே முரண்களும் மோதல்களும் தொடர்ந்தாலும் அடிப்படையில் அன்பெனும் உணர்வூற்றின் வழியே ஒருவரோடு ஒருவர் நேசம் மிக உறவாடுதலும் தொடர்ந்தே வந்திருக்கின்றது. இன்றைய உலகளாவிய மானுடக் கட்டமைப்பின் இறுக்கமான இயக்கம், முரண்களையும் போர்களையும் மீறி வலுவோடு இருப்பதாலேயே பெரும்பான்மை உலகம் சிறந்து நிற்கின்றது.

குறித்தவொரு நாட்டு மக்கள், இயற்கை அழிவுகளால் இல்லது போர்களால் துன்புற நேரிட்டால் அந்த மக்களை நோக்கி உலகின் பல பகுதிகளிலும் இருந்தும் உதவும் கைகள் நீளுகின்றன. மக்களின் துன்பத்தைப் போக்கு - கின்றன. இந்தப் பண்பின் உயிர்ப்பே உலக நீட்சியின் அடிநாதம்.

இந்த ஒப்பற்ற பண்பை சிறு சிறு படிநிலைகளாக, அன்றுதொட்டே வலியுறுத்தி வந்தோர் தமிழர்கள். உலகளாவிய வகையில் புகழ்பெற்ற தமிழர்களின் சொற்றாடரான 'யாதும் ஊரே யாவரும் கேளிர்' என்பது, 'உலகத்து ஊரெல்லாம் எமது ஊர், உலக மக்களெல்லாம் எமது உறவினர்' என்ற உயர் பொருளால் சிறந்து நிற்கின்றது. உலகெங்கும் மானுட ஒருமைப்பாட்டுச் சிந்தனை வலுப்பெறாது, மண்ணுக்கும் பெண்ணுக்கும் பொன்னுக்கும் மோதிக்கொண்டிருந்தவொரு காலத்தில் தமிழ்ச் சான்றோரால் மொழியப்பட்ட தங்கம் நிகர்த்த தமிழ்த்தொடர் இது.

மானுட கூட்டுவாழ்வின் முதல் படிநிலை குடும்ப வாழ்வு. உலகில் குடும்பவாழ்வை அழகுறவும் ஆழமாகவும் பேசிய முதல் இலக்கண இலக்கியங்கள் தமிழருக்கானவை.

குடும்பவாழ்வின் தளநிலையான கணவன் மனைவி உறவுக்குத் தமிழர் இலக்கணம் வகுத்து, தலைமுறைதோறும் அதை வலியுறுத்தி வந்துள்ளனர். குடும்பம் என்ற சொல் கூடுதல் என்ற பொருளையே அடிப்படையாகக் கொண்டது. சங்க இலக்கியங்களில் பயன்படுத்தப்பட்ட 'குடும்பை' என்ற சொல்லின் வளர்ச்சியாகக் குடும்பம் என்ற சொல் திருக்குறளிலேயே முதன் முதலாகப் பயன்பாட்டுக்கு வருகின்றது.

இல்லறமே பிற அறச்செயற்பாடுகளுக்கு முதல்படி. அறத்தால் வருவதே இன்பம் என்று கூறும் வள்ளுவர், 'அறன் எனப்பட்டதே இல்வாழ்க்கை, உலகைப் பேணும் அறப்பணிகளை இல்லறத்தில் இருந்தே தொடங்க வேண்டும்' என்கின்றார். துறந்தார்க்கும் துவ்வாதவர்க்கும் இறந்தார்க்கும் இல்வாழ்வாரே துணை எனத் திருக்குறள் முன்மொழிவதிலிருந்து மானுட ஒருமைப்பாட்டின் முதல்படிநிலை குடும்பமே என்பதை உணரலாம்.

இன்றளவில் உலகில் அமைதி நிலவுவதற்கும் ஏற்றத்தாழ்வுகளற்ற சமுதாயம் வலுப்பெறுவதற்கு மக்களின் ஒருங்கிணைப்பும் மனங்களின் ஒருமைப்பாடும் இன்றியமையாதன. ஒரு நாடு சிறந்தோங்குவதற்கு பெருங்காரணமாகத் திகழ்பவர்கள் அந்நாட்டு மக்களே. இதைச் சங்ககாலத்து ஔவையார் தெளிவுறக் கூறுகின்றார்.

நாடா கொன்றோ காடா கொன்றோ
அவலா கொன்றோ மிசையா கொன்றோ
எவ்வழி நல்லவர் ஆடவர்
அவ்வழி நல்லை வாழிய நிலனே - (புறநானூறு 187)

"நாடாக இருந்தாலும் காடாக இருந்தாலும் தாழ்ந்த நிலமாக இருந்தாலும் மேடான நிலமாகஇருந்தாலும் எவ்விடத்தில் மக்கள் நல்லவராய் விளங்குகின்றனரோ, அவ்விடத்தில் மேன்மை பெற்றுத் திகழ்வாய் நிலமே" என மக்கள் பண்பை முன்னிறுத்தி நிலத்தின் சிறப்புரைக்கின்றார் ஔவையார்.

அக்காலத்தே தமிழகம் பல்வேறு இனங்கள் வந்தும் கலந்தும் செல்கின்ற இடங்களாக இருந்திருக்கின்றது. பிறவினத்தோர் தமிழர்களோடு இணைந்து வாழ்ந்த செய்தியைப் பட்டினப்பாலை கூறுகின்றது.

காவிரிப்பூம்பட்டினம், மதுரை போன்ற தமிழகத்து நகரங்களில் பிறநாட்டார் குடும்பங்களோடு தங்கி வாழ்ந்திருக்கின்றனர் என்பதை இலக்கியங்கள் கூறுகின்றன. அவ்வாறு வந்தோர் தமது மொழியையே பேசி வந்திருக்கின்றனர் என்பதையும் இவை பதிவு செய்துள்ளன.

..மொழிபல பெருகிய பழிதீர் தேஎத்துப்
புலம்பெயர் மாக்கள் கலந்தினி துறையும்
முட்டாச் சிறப்பிற் பட்டினம் - (பட்டினப்பாலை 215_217)

பிற்காலத்தே தோன்றிய பாரதியார், உலகளாவிய தமிழர் குரலாக ஒலித்திருக்கின்றார்.

பாரதி தெய்வத்திடம் வேண்டுகோள் விடுக்கும்போது,

"எண்ணில்லாத பொருட்குவைதானும்
ஏற்றமும் புவியாட்சியும் தருவன்
இன்றென தன்னையென் காளி
மண்ணில் யார்க்குந் துயரின்றிச் செய்வேன்
வறுமை யென்பதை மண்மிசை மாய்ப்பேன்"

என்று வேண்டுகின்றார். "எனக்குப் பொருளும் பதவியும் தருவாயெனில் இந்த உலகத்தில் யாவருக்கும் துயர் இல்லாமல் செய்வேன், வறுமையை உலகெங்கும் ஒழிப்பேன்" எனக் கூறுகின்றார்.

பாரதிக்குப் பின் தோன்றிய பாரதிதாசனும், "எல்லார்க்கும் தேசம் எல்லார்க்கும் உடைமை எலாம் எல்லார்க்கும் எல்லா உரிமைகளும்...

(30ம் பக்கம் வருக)



கனடா மூர்த்தி

# கண்டதை மீண்டும் சொல்லுகிறேன் - 5

இப்போதெல்லாம் யாழ்ப்பாண நகரில் நடந்து திரியும்போது யாழ். பொதுசன நூல் நிலையத்தின் அருகே அமைந்திருக்கும் தந்தை செல்வா எஸ்.ஜே.வி. செல்வநாயகம் நினைவுத்தூபி "எதற்காக அங்கு நிற்கிறது?" என்ற கேள்வி மனதில் எழும். இலங்கையில் சமஷ்டி அமைப்பை கோரும் தமிழரசுக் கட்சியை ஆரம்பித்து - அதன் மூலம் தமிழருக்கான தலைமைத்துவத்துவத்திற்கு உயர்ந்து - பின்பு ஈழப்பிரிவினையை முதன்மை நோக்காகக் கொண்ட தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர்களில் ஒருவராகவும் திகழ்ந்து - நாட்டின் பிரிவினைக்கான அரசியலை வெற்றிகரமாகச் செய்து மறைந்தவர் எஸ்.ஜே.வி. செல்வநாயகம். அது வரலாறு.

இன்றைய தமிழரசுக் கட்சியோ தமிழர் விடுதலைக் கூட்டணியோ அவர் அவற்றில் அங்கம் வகித்த காலத்தின் இருந்ததைப் போலவா தொடர்ந்தும் இருக்கிறது? இல்லைத்தானே. அப்படியிருக்க என்ன காரணத்தால் அவரது நினைவுத்தூபி இன்றும் கம்பீரமாக நிற்கிறது? "தனிமனிதன் எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தை நினைவுபடுத்தவா?" அல்லது "எஸ்.ஜே.வி. செல்வநாயகத்தின் தலைமைத்துவம் வழியாக நாம் பெற்றதொரு மேலான சிந்தனையை மீண்டும் மீண்டும் மக்களுக்கு நினைவுபடுத்தும் அடையாளமாகவா?"

மேலான சிந்தனை என நான் குறிப்பிட்டிருப்பது "தமிழ் ஈழ பிரிவினைக் கோரிக்கை" என்பது நமக்கெல்லாம் தெரிந்த ஒன்றுதான். அந்த மேலான சிந்தனைதான் அவருக்கான நினைவிடமும், அதில் ஒரு நினைவுத்தூபியும் நகரின் மையத்தில் அமையக் காரணமாக அமைந்தது. ஆனால் கால ஓட்டத்தில் இன்று இலங்கையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் என்பவர் யார்? அவருக்கான நினைவுத்தூபி எதற்காக அமைக்கப்பட்டது? என்பதைத் தெரியாமலே வளரும் ஒரு புதிய தலைமுறை வந்துவிட்டது. தனித் தமிழ் ஈழம் என்ற சொல்லை உச்சரிக்கவே பலரும் சங்கடப்படும் நிலைமையும் உருவா - கிவிட்டது. அதற்கு எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமைத்துவம் வகித்த தமிழரசுக் கட்சியோ அல்லது தமிழர் விடுதலைக் கூட்டணியோகூட விதிவிலக்கல்ல. அது ஒருபுறமிருக்க....

இன்றைய தமிழ் அரசியல் செயல்பாட்டாளர்கள், விமர்சகர்களில் சிலருங்கூட நமது அரசியல் போராட்டங்கள் பெரும்பான்மை சமூகத்திடம் கோபத்தை உருவாக்கிவிடக்கூடாது என்பதை அழுத்திச் சொல்கிறார்கள். அமைதி வாழ்க்கையைப் பாதிக்கத்தக்க எதையும் அவர்கள் விரும்புவதாயில்லை. பேரினவாதம் நம்மை நசுக்குகிறது என்பதைப் புரிந்திருந்தாலும் அதற்கெதிராக போராட்டங்கள் தேவையா என்றவகையிலமைந்த குழப்பமும் அவர்களிடம் இருக்கிறது. தனி ஈழம் சார்ந்த கோரிக்கைளை வெளிப்படையாக விடுத்தலாகாது என்பதுதான் அவர்களது நினைப்பாகவும் இருக்கிறது.

இவற்றையெல்லாம் தாண்டி 'ஈழத்தமிழர்களுக்கு நல்ல தலைமைத்துவம் இல்லை' என்று குறைப்படுபவர்களுண்டு. அப்படிக் குறைப்படுபவர்கள்கூட ஒரு தலைவரிடம் தாம் எதை எதிர்பார்க்கிறார்கள் என்பதைச் சொல்ல முடியாதவர்களாகவும் இருக்கிறார்கள். இன்றைய நிலையில் ஒரு நல்ல எதிர்காலத் தமிழ்த் தலைவர் என்னதான் செய்ய வேண்டும்? அப்பாப்பிள்ளை அமிர்தலிங்கம்போல மக்களை போராட்டங்களுக்கு தயார்படுத்த வேண்டுமா? வேலுப்பிள்ளை பிரபாகரன்போல ஆயுதப்போராட்டத்தை நடத்தவேண்டுமா? சௌமியமூர்த்தி தொண்டமான்போல இணக்க அரசியல் செய்ய வேண்டுமா? பதில் இல்லை. இருக்கும் தலைவர்களோ பதின்மூன்று, பதின்மூன்று ப்ளஸ் என்று "இந்தியா நம்மீது திணித்த தீர்வைத்தான்" சொல்லி தமக்குள் சண்டை போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

இந்த நிலையில், தந்தை செல்வா - வட்டுக்கோட்டைத் தீர்மானம் என்று சொல்லி - தமிழ் ஈழக் கோரிக்கையை சிறீலங்கா பாராளுமன்றத்தில் பிரகடனம் செய்த நிகழ்வு சிந்தனையைத் தூண்டுகிறது. அந்த நிகழ்வு குறித்து யாழ்ப்பாணத்து ஈழநாடு தினசரி - யில் (02.05.2021) மூத்த எழுத்தாளரும், செய்தியாளருமான மாலி அவர்கள் தனது முன்னிலை அனுபவமாக எழுதிய ஒரு கட்டுரையைக் கண்டிருந்தேன். கண்டதை - பிரதிபண்ணாது - மீண்டும் சொல்கிறேன்.



இதே நவம்பர் மாதம் 19ஆம் திகதி 1976ம் ஆண்டு வட்டுக்கோட்டைத் தீர்மானத்தை எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பாராளுமன்றத்தில் அறிவித்தபோது அது குறித்து அவரது கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்களே அறிந்திருக்கவில்லையாம். தமது கட்சியின் நடவடிக்கை, மற்றும் கட்சியின் கொள்கை தொடர்பில் அமைந்திருந்த மகா பெரியதொரு விடயத்தை எஸ்ஜே.வி. செல்வநாயகம் "தனது கட்சியின் பாராளுமன்றக் குழுவிற்கே தெரிவித்திருக்கவில்லை" என்ற தகவல் உண்மையில் வியப்பானதொன்றாகும்.

அன்றைய தேசிய அரச பேரவையில் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் பிரகடனத்தை வாசித்தபோது அவரது தலைமைத்துவத்துவத்தின் கீழ் 13 பாராளுமன்ற உறுப்பினர்கள் இருந்திருக்கிறார்கள். அவர்களுக்கான பாராளுமன்றக் குழுவும் இருந்திருக்கிறது. ஆனால் கட்சியின் நடவடிக்கை, கொள்கை தொடர்பில் இத்தகைய ஓர் அதி முக்கியத்துவம் வாய்ந்த அறைகூவலை தமது தலைவர் அன்று விடுக்கப்போகிறார் என்பதை குறைந்தபட்சம் அவரது கட்சி பாராளுமன்றக் குழுகூட அறிந்திருக்கவில்லை. குழந்தை உள்ளமும் தீர்க்க தரிசனமுமான அந்தத் தலைவர், உண்மையில் கட்சி ஒழுங்கை மீறினாரா? அல்லது கட்சி ஒழுங்குக்கு அமைவாக நடக்கவில்லையா? அல்லது தன்னிச்சையாக நடந்தாரா? என்பதெல்லாம் இன்று எழுகின்ற கேள்விகள்தான். ஆனால் அதற்காக, அன்று அவரை யாரும் குற்றம் சொல்லவில்லை. அது தமது 'தலைவனின்' சிறப்புரிமை என்றே அனைவரும் கருதிக் கொண்டார்கள். அப்படியொரு கட்டுக்கோப்பான நிலை தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்திருக்கிறது. அது ஒரு ஜனநாயகப் பொற்காலம்.

தந்தை செல்வா பேசிய அந்தப் பேச்சின் சாராம்சம் இதுதான்: "இந்த நாட்டில் மக்களின் ஆதரவைப் பெற்றிருந்த இரண்டு பிரதமர்களுடனும் தமிழர் பிரச்சனை குறித்து ஒப்பந்தம் செய்தேன். ஆனால், அவர்கள் இருவருமே பின்னர் சிங்கள மக்களுக்குப் பயந்து, அவ்வொப்பந்தங்களை நிறைவேற்றவில்லை. இந்நிலையில், சமஷ்டி கோரிய நாம், அக் கொள்கையினைக் கைவிட்டு, அடுத்த நிலைபற்றி நிதானமாக யோசித்தோம்.

( 30ம் பக்கம் வருக )



அ. முத்துலிங்கம்

# வெள்ளைக் காகம்

நண்பர் ஒருவர் தந்த புத்தகம் The Man- Eater of Punanai. அதை எழுதியவர் கிறிஸ்டஃபர் ஒண்டாச்சி. புக்கர் பரிசு, கில்லர் பரிசு ஆகியவற்றைப் பெற்ற மைகேல் ஒண்டாச்சியின் சகோதரர். புத்தகத்தைப் படிக்கச் சொல்லி நண்பர் வற்புறுத்தினார். அவருடைய தொல்லை தாங்காமல் கடைசியில் ஒருநாள் படித்தேன். அதைத்தான் ஒண்டாச்சியினுடைய வார்த்தைக-ளில் சுருக்கி கீழே தந்திருக்கிறேன்.

\- - - - - - - - - - -

நான் 1993 ல் இலங்கையில் கழித்த நாட்களில் அதிவிசித்திரமானது முன்னாள் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனாவை சந்தித்த அந்த நாள்தான். அவர் இறப்பதற்கு மூன்று வருடங்களுக்கு முன்னர் அவருடைய வார்ட் பிளேஸ் வீட்டில் சந்திப்பு நடந்தது. தன் பழைய கதைகளால் எனக்கு களிப்பூட்டினார். சில இடங்களில் வியப்பூட்டவும் தவறவில்லை.

அவருடைய தோட்டம் அழகாகப் பராமரிக்கப் - பட்டிருந்தது. நிறையக் காக்கைகள் கூட்டம் கூட்டமாக கிளைகளில் உட்கார்ந்திருந்தன. ஆச்சரியமான விசயம் என்னவென்றால் அந்தக் கூட்டத்தின் நடுவே ஒரு வெள்ளைக் காக்கையும் காணப்பட்டதுதான். இளஞ்சிவப்பு கால்களுட - னும், சாம்பல் நிற அலகுடனும் முழுக்க முழுக்க வெள்ளை நிறத்தில் அது மிக அழகாக இருந்தது. நான் சந்திப்பை முடித்துவிட்டு புறப்பட ஆயத்தமாகிக் கொண்டிருந்தேன். எனினும் ஆச்சரியம் தாங்காமல் அந்த வெள்ளைக் காக்கை பற்றி அவருக்கு ஏதாவது தெரியுமா என்று கேட்டேன். "நீங்கள் மறுபடியும் உட்காரவேண்டும்" என்றார் ஜே.ஆர். ஏதோ வருகிறது என உணர்ந்து நான் அமர்ந்தேன்.

"நீங்கள் Meredith Foster பற்றிக் கேள்விப் பட்டிருக்கிறீர்களா?" அந்தப் பெயர் எனக்குப் பரிச்சயமானதுதான். அவர் இங்கிலாந்தைச் சேர்ந்த பிரபலமான பத்திரிகை நிருபர். 1980களில் கொழும்பிலே தங்கியிருந்து போர் பற்றிய செய்திகளை வெளிநாட்டு பத்திரிகை - களுக்கு உடனுக்குடன் அனுப்பி வந்தவர். அவருடைய போர்ச் செய்திகளுக்கு நல்ல மதிப்பிருந்தது. இந்தியாவின் அமைதிப் படை - யினரால் சமாதானத்தை கொண்டுவரமுடியாத இக்கட்டான போர்ச்சூழல் நிலவிய காலம் அது. கொழும்பிலே ஆறு ஏழு வருடங்கள் தங்கி மெரிடித் தொடர்ந்து செய்திகள் அனுப்பினார். அவர் கணவர் இங்கிலாந்தில் இருந்தார். ஒருநாள் மெரிடித் திடீரென்று காணாமல் போய் - விட்டார். இந்தச் சம்பவம் ராணுவ பக்கத்திலும், புலிகள் பக்கத்திலும் பீதியைக் கிளப்பியது.

இரு சாராருக்கும் மெரிடித் மீது மரியாதை இருந்தது. அவர் மறைந்தது அரசாங்கத்துக்கு பெரும் புதிராகி பிரச்சினை பெரிதானது.

"உங்களுக்குத் தெரியும் மெரிடித் 30 _ 35 வயது அழகி. பொன் தலைமுடி - யுடன் யாரையும் கணத்தில் கவர்ந்துவிடுவார். என்னுடைய மந்திரி ஒருவருடன் அவர் கள்ள நட்பு வைத்திருந்தார். அவருடைய மனைவி பொறாமைப்படும் அளவுக்கு அது ஆழமானது. நான் மந்திரியை கூப்பிட்டு எச்சரிக்கை செய்தேன். ஒருவித பயனும் இல்லை. மந்திரியின் மனைவி பெரிய குழப்பமான மனநி - லையை அனுபவித்தார்.

"கத்தடியா பற்றி நீங்கள் அறிவீர்கள். மோசமான சூனியக்காரர்கள். மந்திரியின் மனைவி தன் கணவரை மீட்பதற்காக சூனியக்காரர் ஒருவரை அணுகியிருக் - கிறார் என நான் யூகிக்கிறேன். கத்தடியா அந்தப் பெண்ணை எப்படியோ கடத்திச் சென்று காட்டு மரத்திலே கொடிகளால் கட்டிவைத்து ஏதோவிதமான சூனியச் சடங்குகளைச் செய்திருக்கிறார். அதிலே அவர் இறந்து போயிருக் - கலாம். அவர் உடலை கண்டு பிடிக்கவே முடியவில்லை. காட்டிலே சூனியக்காரனின் சடங்கு நடந்த அதே நேரம் இங்கே இந்த வெள்ளைக் காக்கை தோன்றியது."

இதுவெல்லாவற்றையும் ஜே.ஆர் விவரிக்க நான் ஆச்சரியத்துடன் கேட்டேன். திகைப்பு முழுவதும் நீங்காத நிலையில் ஜே.ஆரிடம் விடைபெற்றபோது என் கண்முன்னே இன்னொரு அதிசயம் நடந்தது. யன்னல் கண்ணாடியின் மற்றப் பக்கம் அந்த வெள்ளைக் காக்கை ஆவேசத்துடன் கொத்தத் தொடங்கியது. கம்பியில்லாத் தந்தியில் டக்டக் என்று ரகசியச் செய்தி அனுப்புவது போல காக்கை விடாமல் கொத்தியது. முன்னாள் ஜனாதிபதி அவசரமில்லாமல் நடந்து சென்று யன்னலைத் திறந்தார். வெள்ளைக் காக்கை உள்ளே பறந்து வட்டமடித்து அவர் தோள்மேலே நட்புடன் வந்து உட்கார்ந்தது. ஜனாதிபதி தோள்களை இறுக்கி அசையாது சிலைபோல நின்றார். அச்சமூட்டும் கண்களால் என்னை உற்று நோக்கினார். நான் விடைபெற்றபோது அவர் தோள் மூட்டு மெல்ல அசைந்தது.

\- - - - - - - - - - -

இதுதான் அந்தப் புத்தகத்தில் கிடைத்தது. நம்பலாமா விடலாமா என்பதை நான் இன்னும் முடிவு செய்யவில்லை. கோடிக்கு மேல் மக்களைக் கொன்று குவித்த ஹிட்லர் தன்னுடைய வளர்ப்பு நாயான ப்ளொண்டியை நஞ்சு கொடுத்து கொன்றுவிட்டு துயரம் தாங்காமல் விம்மி விம்மி அழுதாராம். கொடுங்கோலன் சதாம் உசேன் தூக்கு மரத்துக்கு போக முன்னர் சிறைக் காவலாளியிடம் தான் வளர்த்த செடிக்கு தவறாமல் தண்ணீர் வார்க்கச் சொல்லி வேண்டிக் கொண்டாராம்.

தமிழர்களை பட்டினி போட்டால் சிங்களவர்களுக்கு மகிழ்ச்சியாயிருக்கும் என்று சொன்னவரும், 150,000 தமிழர்கள் வீடிழந்து அனாதைகளாகி வீதிகளில் நிற்கக் காரணமானவரும், என்றென்றும் தமிழ் மக்கள் நினைவிலிருந்து அழியாத கறுப்பு யூலையை தோற்றுவித்தவரும் ஆன ஜே.ஆர். பழிபாவத்துக்கு அஞ்சாதவர். இவர் நெஞ்சில் எங்கேயோ கொஞ்சம் ஈரம் இருந்ததுதான் ஆகப் பெரிய அதிசயம்.

# கனடா கலைமன்ற 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு



'நாட்டிய ஆச்சார்யா' திருமதி நிறைஞ்சனா சந்துருவை நிறுவனராகவும் அதிபராகவும் கொண்ட கனடா கலைமன்றத்தின் பத்தொன்பதாவது ஆண்டு 'நிருத்த நிறைஞர்' பட்டமளிப்பு விழா கடந்த மாதம் முதலாம் திகதி ரொறன்ரோ யோர்க்வூட் கலையரங்கத்தில் இடம்பெற்றது. தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவை 'சங்கீத நாட்டிய விதுஷி' செல்வி ஐஸ்வர்யா சந்துரு வரவேற்புரை வழங்கி ஆரம்பித்து வைத்தார். நிருத்த நிறைஞர் பட்டம் பெற்ற செல்வி நிலக்ஷா பிரகாஷை எழுத்தாளர் க. நவம் அறிமுகம் செய்தார். கலைமன்றத்தின் பத்து மாணவிகள் நடன ஆசிரியர் டிப்ளோமா பட்டம் பெற்றதற்கு சான்றிதழ் வழங்கி மதிப்பளிக்கப்பட்டனர். சகல தரங்களிலும் கலை பயிலும் மாணவர்களுக்கு சான்றிதழ்கள் வழங்கப்பட்டது. **(ஒளிப்படங்கள்: ஐயா4u)**















# சிறப்புரை: தமிழ் இலக்கியத்தில் அறம்







கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் ஏற்பாடு செய்த எழுத்தாளர் ஜெயமோகனின் தமிழ் இலக்கியத்தில் அறம் எனும் தலைப்பிலான சிறப்புரை கடந்த மாதம் 21ம் திகதி மார்க்கம் நகரசபை மண்டபத்தில் இடம்பெற்றது. சுமார் இரண்டு மணித்தியாலத்துக்கு உரையும் கலந்துரையாடலும் தொடர்ந்தது. மார்க்கம் நகரசபை உறுப்பினர் ஜுனைற்றா நாதன் எழுத்தாளர் ஜெயமோகனுக்கு வாழ்த்துப் பத்திரம் வாசித்து மலர்க்கொத்து வழங்கி மதிப்பளித்தார். ஜெயமோகன் தம்பதியருடன் மூத்த எழுத்தாளர் திரு. அ. முத்துலிங்கம் மூன்றாவது படத்தில்.

# உள்ளும் புறமும்

காலநிலை நான்கு பருவங்களைக் கொண்டதென்று பாடசாலையில் படித்ததுண்டு. ஆனால், எங்கள் தாய்நாட்டில் இரண்டே இரண்டு பருவங்கள்தான். மழை, வெய்யில் (மாரி, கோடை) தவிர தை, மாசி மாதங்களில் பனி வரும். மரங்களின் இலைகளில் இதனை அவதானிக்கலாம்.

கனடாவுக்கு வந்த பின்னரே நான்கு பருவங்களையும் உணர முடிந்தது. வசந்தம், கோடை, இலையுதிர், குளிர் (பனி) காலமென சொல்லி வைத்தாற்போல மூன்று மாதத்தவணையில் மாறி மாறி வரும்.

மாற்றம் ஒன்றே மாறாதது என்பதற்கிணங்க இப்போது கனடாவிலும் பருவ கால மாற்றம் காணப்படுகிறது. இதற்கும் காலநிலை மாற்றமே (Climante change) காரணம் என்கிறார்கள். அதிகாரபூர்வமாக பருவ காலங்கள் ஆரம்பிக்கும் மாதமும் திகதியும் அறிவிக்கப்பட்டாலும் அதற்கேற்றவாறு இப்போது மாற்றங்கள் இடம்பெறுவதில்லை.

இதற்கு அரசாங்கத்தையோ ஆட்சியாளர்களையோ குறை கூற முடியாது. காலம் செய்யும் கோலம் என்று கூறி மனதை அமைதிப்படுத்திக் கொள்வோமாக.

இந்த வருட கோடை காலம் கனடாவில் உஷ்ணத்தின் உச்சமாக இருந்தது. வீதிகளில் பலர் ஆடைக்குறைப்புடன் ஓடி ஓடி பறந்து சென்றனர் - வெப்பம் தாங்க முடியாதவாறு. மழையும் வெய்யிலும் சேர்ந்து சில சமயம் ஒன்றாகவே வந்தது. இதனால் தோட்டச் செய்கைகள் பாதிக்கப்பட்டன.

எம்மவர் பலரின் வீட்டுத் தோட்டங்கள் எதிர்பார்த்த உற்பத்தியை வழங்க - வில்லை. இதனால் சந்தையில் மரக்கறிகள் முப்பது நாற்பது சதவீதத்தால் அதிகரித்திருந்தது.

சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திய வணிக முதலைகளும் அங்காடி உரிமையாளர்களும் தம்மிஷ்டப்படி பொருட்களின் விலைகளை நிர்ணயித்தனர் (உயர்த்தினர்). இவற்றின் நிர்வாகிகளையும் உரிமை - யாளர்களையும் அரசாங்கம் அழைத்துப் பேசியும் விலைகள் குறைக்கப்படவில்லை. எல்லாமே அரசிய - லாகி விட்டது. இதனால் பலர் உணவு வங்கியை நம்பி வாழும் நிலை ஏற்பட்டுள்ளது.

இந்தக் கோடை காலத்தில் புதியதொரு காட்சியை ரொறன்ரோ பெரும்பாகத்தில் ஆங்காங்கே அவதானிக்க நேர்ந்தது. வெய்யில் வெப்பத்திலிருந்து தங்களைக் காப்பாற்ற பலரும் இம்முறை குடைகளைப் பயன்படுத்தினர். கடந்த காலங்களில் தொப்பிகளை அணிந்தவர்கள்கூட வெப்பம் தாங்க முடியாததால் இம்முறை குடைகளுக்கு மாறினர். பெண்களே கூடுதலாக குடைகளுடன் காணப்பட்டனர்.



## அதிரனின் நயனவழி

02

குடைகள் என்றதும் எம்மவர் பலருக்கும் கறுப்புச்சீலை குடைகளே நினைவுக்கு வரும். பெண்களின் அரைக்குடைகள் வெவ்வேறு வர்ணங்களில் இருக்கும். ஆனால், இங்கு காணப்பட்ட குடைகளில் பெரும்பாலானவை பல வர்ணங்களால் ஆனவை. அவற்றில் கவர்ச்சிகரமான சித்திரங்களும் கவர்ந்திழுக்கும் காட்சிகளும் காணப்பட்டன.

பட்டம் விடும் காட்சி, விமானம் பறக்கும் காட்சி, வண்ண வண்ணப் பறவைகள் வட்டமிடும் காட்சி என இவை பல விதம். ஜப்பான் தயாரிப்புக் குடைகளில் அந்நாட்டின் அழகுறு பூங்காக்கள் அச்சிடப்பட்டிருந்தன. சீனத் தயாரிப்புக் குடைகளில் விதம் விதமான பூக்களும் வேறு காட்சிகளும் பிரிண்ட் பண்ணப்பட்டிருந்தன.

மகளிருக்கான fancy குடைகளில் அதிகம் காணப்பட்ட வனப்புமிகு காட்சி வானவில். எல்லா வகையான வர்ண உடைகளுக்கும் இது பொருந்துவதாக அமைந்ததால் இதனையே பெரும்பாலானவர்களும் விரும்பிப் பாவித்தனர். இந்த வண்ணக்குடைச் சீலைகள் பிளாஸ்ரிக் தன்மையாக இல்லாமல் சீலையாக இருந்ததால் வெப்பத்தைத் தாங்கக்கூடியதாக இருந்தது. ஆனால், விலை அதிகமில்லை. பத்து பதினைந்து டாலர்களுக்கு பல இடங்களிலும் இவைகள் விற்பனை செய்யப்பட்டன.



கூடைக்குடைக்கு இப்போது நல்ல கிராக்கி. கோழிக்கூடு போன்ற தாழ்வட்ட வடிவில் வெள்ளை நிற பிளாஸ்ரிக் போன்ற ஒருவகை நெகிளியால் ஆனது இந்தக்குடை. வெய்யில், மழை, பனி ஆகியவற்றிலிருந்து முழு உடம்பையும் காப்பாற்றக்கூடியதாக இந்தக் கூடைக்குடை உருவாக்கப்பட்டுள்ளது.

இங்கு நான் சொல்லவரும் விடயம் வேறொன்று. குடைகளை பொதுவாக வெளியில் நடமாடும்போதே நாம் பயன்படுத்துவோம். ஆனால், கடந்த மாதம் ஒரு முதுமாதுவை (முதிர்ந்த அன்னை) ஓர் அங்காடிக்குள் கண்டேன். தள்ளுவண்டியோடு ஒவ்வொரு பிரிவாகச் சென்று ஆறுதலாக பொருட்களை எடுத்துக் கொண்டி - ருந்தார். மறுகரத்தில் கூடைக் குடையை விரித்து வைத்துக் கொண்டே பொருட்களை தெரிந்தெடுத்துக் கொண்டிருந்தார்.

இதற்கு முன்னர் இவ்வாறு எவரும் வணிக நிறுவனங்களுக்குள் குடை பிடித்தவாறு பொருட்களை வாங்கியதை நான் பார்த்ததில்லை. அதனால் இவர் எனக்கு வித்தியாசமாக காணப்பட்டார். அவர் அருகில் சென்று உற்று நோக்கினேன். ஒரு கையில் குடை மட்டுமன்றி முகக்கவசம் அணிந்திருந்தார். இரண்டு கைகளிலும் கையுறை காணப்பட்டது. என் அருகில் வராது சற்றுத் தள்ளி நின்றே என்னுடன் உரையாடினார்.

“மீண்டும் கொரோனா வருகிறது என்கிறார்கள். எனக்கு வயது 85. அந்தக் கிருமிகள் என்னைத் தொற்றாமலிருக்க குடையும், முகக்கவசமும், கையுறையும் அவசியமானது. காதுக்குள்ளாலும் கொரோனா பாயும் என்கிறார்கள். அதனால்தான் உள்ளேயும் குடையுடன் நிற்கிறேன்” என்று விபரமாகச் சொன்னார்.

குடை மழைக்கும் வெய்யிலுக்கும் மட்டுமே பாதுகாப்பென்றில்லை. இப்போது கொரோனாவுக்கும்..... அம்மையாரின் அனுமதியுடன் அவரை ஒரு படம் எடுத்துக் கொண்டேன்.



ப. ஸ்ரீஸ்கந்தன்

# ஞாபகம் துளிர்க்கிறதே !

30

## ஓர்மம்

அப்பா ஒரு நாளும் எனக்கு அடித்ததில்லை. ஆனால், கோபம் வந்து பேசினார் என்றால், அட இதைவிட அடித்திருக்கலாம் என்றளவுக்கு அவரது பேச்சு. விசுப்பிளாந்திகள் என்று விளித்துத்தான் பேச்சு நடக்கும். கிரியாவின் கடைசி சொல் அகராதி வரை தேடிப் பார்த்துவிட்டேன், அப்படியொரு சொல் தமிழில் இருப்பதாகத் தெரியவில்லை.

அப்படித் தொடங்கி, “பிள்ளைகள் என்றால் ஓர்மம் இருக்கோணும்” என்று முடிப்பார். ஓர்மம் என்ற சொல்லுக்கும் எனக்கு அப்போது அர்த்தம் தெரிய - வில்லை. என்னத்தைச் சொல்ல வாறார் என்றும் விளங்கவில்லை.

தென்னம்பிள்ளைகளுக்குத் தண்ணீர் ஊற்றாமல் விட்டாலும் பள்ளிக்கூடத்தில் புள்ளிகள் குறைந்தா - லும் அப்பாவின் இந்த ஓர்மப் பேச்சு நடக்கும். கிணற்றிலிருந்து ஐம்பது மீற்றர் தூரத்திலிருக்கும் தென்னம்பிள்ளைகளுக்கு வாளியில் தண்ணீர் கொண்டு போறது அவ்வளவு லேசுப்பட்ட காரியம் இல்லை. அப்பா கொழும்பிலிருந்து வாறதுக்கு முதல் நாள் மட்டும் அவசரம் அவசரமாக தண்ணியை ஊற்றுவேன். அப்பா வந்து பார்த்துவிட்டு தண்ணியை ஊற்றினாயா, தெளிச்சாயா என்று பேச்சுத் தொடங்கும்.

எங்கள் சென்.ஜோன்ஸ் கல்லூரியில் சராசரிப் புள்ளி 75க்கு மேலிருந்தால் Honours என்றும் 50க்கு மேல் என்றால் Good என்றும் மதிப்பீடுகள் பல இருந்தன.

எனக்கு Honours தான் வந்து கொண்டிருந்தது. எப்போது எங்கள் பாடத்திட்டத்துக்குள் ஆங்கில இலக்கியம் வந்ததோ அன்று எனது சராசரிப் புள்ளி சரிந்து போனது. Good க்கு இறங்கினதுக்கு அப்பாவின் ஓர்மப் பேச்சு அகோரமாக நடந்தது. அந்த The Coral Island என்ற ஆங்கில இலக்கியப் புத்தகத்தின் மீது எனக்கு கோபம் கோபமாக வந்தது.

அடுத்தமுறை அப்பா வந்தபோது கன்றுகளுக்குத் தண்ணி ஊற்றினாயா, வயலைப் போய் பார்த்தாயா என்று வழமையான கேள்விகள் எதுவும் வரவில்லை. The Coral Island புத்தகத்தை எடுத்து வாசிக்கச் சொன்னார். ஒவ்வொரு வரியையும் தமிழில் சொல்லு என்றார். அவர் தனது பிரசங்கத்தைத் தொடர்ந்தார். எனக்குத் தெரிந்த சொற்களும் தொண்டைக்குள் நின்று போயின. அன்று எங்களுக்குள் விரிசல் விழுந்தது.

என்னதான் உயர்வகுப்பு மாணவர்களுக்குப் படிப்பித்தாலும் ஒருநாள்கூட எனது மகளுக்கு நான் படிப்பித்தது கிடையாது. படிக்காவிட்டாலும் பரவா - யில்லை, உறவு முறியாமல் இருக்க வேண்டுமென்று நினைத்திருந்தேன்.

இத்தனைக்கும் அப்பா ஒன்றும் மோசமானவர் இல்லை. நான் மூத்த மகன் என்பதால் அவரது எதிர்பார்ப்பு அதிகமாக இருந்திருக்கலாம். அவரைக் கவலைப்படுத்திவிட்ட குற்ற உணர்வு இன்றும் எனக்கு இருக்கிறது.

ஒவ்வொரு மாதமும் மெயில் வண்டியில் வந்து புங்கங்குளம் புகையிரத நிலையத்தில் இறங்குவார். வீட்டுக்கு வந்ததும் தூங்கிக் கொண்டிருக்கும் கடைசித் தம்பி கணேசை தூக்கி தோளில் போட்டு “சலம்பூவோடு தூபம் மறந்தறியேன்....” போன்ற தேவாரங்களை இசையோடு பாடியபடி முற்றத்தில் உலாவுவார். பிள்ளைகளின் உடுப்புகளை அள்ளி வைத்து கிணற்றடியில் தோய்ப்பார். வயலுக்குப் போவார். இடைக்கிடை சாராயம் விற்கிற கனகர் வீட்டுக்குப் போய்வந்து கணகணப்பாய் இருப்பார். நேரம் கிடைக்கும் போதெல்லாம் கந்தனைச் சென்று தரிசிப்பார்.

என் சிறுவயதில் ஒரு நாள் என்னையும் சைக்கிளில் ஏற்றிக் கொண்டு நல்லூருக்குப் போனார். திரும்பி வரும்போது செட்டித்தெருவில் சைக்கிளின் முன்சில்லுக்குள் காலைக் கொடுத்துவிட்டேன். இருவரும் தலைகுப்புற விழுந்தோம்.

என்னால் நடக்க முடியவில்லை. ஸ்ரான்லிக் கல்லூரிக்கு முன்னாலிருந்த பரியாரிடம் என்னைத் தோளில் சுமந்து கொண்டு சென்றார். இன்று செட்டித்தெருவை கடக்கும்போதெல்லாம் அந்தச் சம்பவம் நினைவில் வந்து என்னை உலுக்குகிறார்.

அந்தத் தென்னங்கன்றுகள் மரமாகி குலைகுலையாகக் காய்க்கின்றன. மாமரங்கள் செழித்து வளர்ந்து பூத்திருக்கின்றன. அதன் நிழலில் சாய்மனைக் கதிரையைப் போட்டு காற்று வாங்க இதமாக இருக்கிறது. இடையே அப்பாவின் நினைவும் வந்து போகிறது.

கனடாவில் நான் வேலை புரிந்த வங்கியின் மனேச்சர் எனக்குத் தர வேண்டிய பதவி உயர்வைத் தராதது பற்றி முன்னர் எழுதியிருந்தேன். இருந்து பார் உந்தக் கதிரையில் நான் இருந்து காட்டுகிறேன் என்று மனதில் நினைத்துக் கொண்டேன்.

நினைத்ததுபோல் எனது விடாமுயற்சியால் மனேச்சர் பதவி எனக்குக் கிடைத்தது. அப்பாவின் ஓர்மம் என்ற சொல்லின் அர்த்தமும் விளங்கியது.

எனினும் அதனைக் காண்பதற்கு அப்பா அப்போது உயிருடன் இருக்கவில்லை.

இலங்கையின் தபால் இலாகாவில் கணக்குப் பரிசோதகராக பணியாற்றிய அப்பா இலங்கை பூராவும் அலைந்து திரிந்தார். அண்மையில் இலங்கையின் பல இடங்களைச் சுற்றி வந்தேன். ஒவ்வொரு இடத்திலும் தபால் கந்தோரைக் காணும்போது அப்பாவின் நினைவு வந்தது.

அப்பா இங்கே வேலை செய்திருப்பாரோ, எங்கு தங்கியிருப்பார், இந்தக் கடையில் சாப்பிட்டிருப்பாரா, எங்களுக்குக் காசு அனுப்ப வேண்டுமென்று இரவில் சாப்பிடாமல் இருந்தாரா, இனஅழிப்புகளின் போது எப்படித் தப்பியிருப்பார்?

ஒன்றும் தெரியவில்லை. இதயம் இறுகுகிறது.

மேலே சந்திக்கும் வாய்ப்பிருந்தால் சந்தித்துப் பேச வேண்டும்.

# சேக்கம்: நாற்பதாவது ஆண்டு பூர்த்தி விழா






கனடிய தமிழர் சமூகத்தின் மூத்த சமூக நிறுவனங்களில் ஒன்றான சேக்கம் (SACEM) அமைப்பின் நாற்பதாவது ஆண்டு பூர்த்தி விழா கடந்த மாதம் 20ம் திகதி ஸ்காபரோ ஜே.சி. விருந்துபசார மண்டபத்தில் இடம்பெற்றது. கனடிய கன்சர்வேடிவ் கட்சியின் தலைவரும் எதிர்க்கட்சித் தலைவருமான திரு. பியர் பொலிவியர் சிறப்பு அதிதியாகக் கலந்து தமிழர் சமூகத்தின் சிறப்பு இயல்புகளை வியந்து உரையாற்றினார். சேக்கம் அமைப்பின் நாற்பதாண்டு தொடர்ச்சியான பணிக்கு தனது வாழ்த்துகளையும் தெரிவித்தார். கனடிய மத்திய அரசின் அமைச்சர் ஹரி ஆனந்தசங்கரி, ஒன்ராறியோ மாகாண இணை அமைச்சர் விஜய் தணிகாசலம், மார்க்கம் நகரசபை உறுப்பினர் ஜூனைற்றா நாதன் ஆகியோரின் வாழ்த்துரைகளுடன் பல்வேறு கலை நிகழ்ச்சிகளும் மேடையேறின.








# இரா. சம்பந்தனின் 'விழியும் துளியும்' வெளியீடு









நாடறிந்த படைப்பாளியும் 'தமிழர் தகவல்' தொடர் எழுத்தாளருமான திரு. இரா. சம்பந்தனின் இரண்டாவது சிறுகதைத் தொகுப்பு 'விழியும் துளியும்' வெளியீட்டு விழா கடந்த மாதம் 14ம் திகதி கனடா ஐயப்பன் கோவில் கலாமண்டபத்தில் இடம்பெற்றது. ஈழநாடு பதிப்பகம் இந்நூலை வெளியீட்டிருந்தது. சட்டத்தரணி நாதன் சிறீதரனின் வாழ்த்துரையுடன் ஆரம்பமான இவ்விழாவில் நூலின் வெளியீட்டுரையை திரு. பொன்னையா விவேகானந்தன் நிகழ்த்தினார். ஆய்வுரைகளை திருமதி மீரா இராசையா, திரு. எஸ்.எம். தனபாலன் ஆகியோர் நிகழ்த்தினர். நூலை அழகுற வடிவமைத்த திரு. பா. ஞானபண்டிதன் சிறப்புரை வழங்கினார். தமிழர் தகவல் முதன்மை ஆசிரியர் திரு எஸ். திருச்செல்வம் அவர்களின் தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் ஈழநாடு ஆசிரியர் திரு. ரி.கே. பரமேஸ்வரனின் நன்றியுரையைத் தொடர்ந்து நூலாசிரியர் இரா. சம்பந்தனின் சுருக்கமான ஏற்புரை இடம்பெற்றது.





## கவிஞர், எழுத்தாளர், ஆசிரியர், தமிழ் விரிவுரையாளர்

# பொன்னையா விவேகானந்தனின் நான்கு நூல்கள் அரங்கேற்றம்



கனடிய மூத்த எழுத்தாளர்களில் முக்கியமான ஒருவரான திரு.பொன்னையா விவேகானந்தனின் நான்கு நூல்களின் அரங்கேற்றம் ஸ்காபரோ தமிழ் இசைக்கலாமன்ற அரங்கில் கடந்த மாதம் 8ம் திகதி நிகழ்ந்தேறியது. சம்பிரதாய - பூர்வமான ஆரம்ப நிகழ்ச்சிகளைத் தொடர்ந்து பறை இசை இடம்பெற்றது. கனடாவில் மக்களால் தேர்தலின் மூலம் தெரிவு செய்யப்பட்ட அரசியல், கல்வித்துறை பிரதிநிதிகளான ஆறு பிரமுகர்கள் வாழ்த்துரை வழங்கினர். திரு. பாஸ்கரன் சுப்பிரமணியத்தின் வரவேற்புரையைத் தொடர்ந்து, பெயர்வுச் சமூகம் - இருப்பும் இடர்களும், அறிவோம் தமிழ்ப் பண்பாடு, தாய்மொழிக் கல்வி - வழிகாட்டல்களும் எடுத்துக்காட்டுகளும், பொன்னையா விவேகானந்தனின் நாடகங்கள் ஆகிய நூல்களை முறையே திருமதி. மேர்ளின் இமானுவல், செல்வி மாதுமை நடராஜா, திருமதி. வாசுகி நகுலராஜா, கவிஞர் அ. கந்தசாமி ஆகியோர் ஆய்வுரை செய்தனர். திரு.பி.ஜெ. டிலிப்குமார் வெளியீட்டுரை நிகழ்த்தினார். நூல்களின் முதற்படியை நூலாசிரியர் பொன்னையா விவேகானந்தன் முதுதமிழ் சான்றோர் பண்டிதர் ச.வே. பஞ்சாட்சரம் அவர்களுக்கு வழங்கி மதிப்புச் செய்தார். மாணவர்களின் நடன நிகழ்ச்சிகள் விழாவைச் சிறப்பித்தன. திருமதி. மாலா விவேகானந்தன் நன்றியுரை நல்கினார். திரு. கந்தசாமி கங்காதரன் நிகழ்ச்சிகளை தொகுத்து வழங்கினார். நூல்கள் அரங்கேற்ற வைபவமொன்று மண்டபம் நிரம்பி ஆசனங்கள் இல்லாத நிலையில் ஆர்வலர்கள் திரண்டு நின்ற முதலாவது விழாவாக இந்நிகழ்வு அமைந்தது வரலாற்றுப் பதிவாகும்.




















வாகன விபத்தில் காயமடைந்து விட்டீர்களா?
அனுபவசாலிகளின் ஆலோசனை
பெற்றபின் உங்கள் முடிவை எடுங்கள்.
MATRIX LEGAL SERVICES
PROFESSIONAL CORPORATION
Even if the accident is your fault:
Employed • Unemployed
Passenger • Pedestrian
Public transit
cyclist
WE ARE HERE TO
HELP YOU
இலவச ஆலோசனைகளுக்கு:
தீபன்
24 Hours Direct Line
(416) 831-4444
(416) 505-9804
2190 Warden Ave., Suite 202, Toronto, ON M1T 1V6


MEDCENTRE HEALTH
SYNCHRONIZING HEALTH SECTORS
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
2901 Markham Rd Scarborough, ON M1X 0B6
(Markham and McNicoll Intersection)
MORE DOCTORS, MORE CARE
MMUCC now has more doctors to serve you.
Unit 11 has expanded to Unit 6 as well.
The number of doctors working in the Walk-In Clinic / Urgent Care have increased to seven (07) recently.
We will continue to open all 365 days a year.
Patients Walk-in without appointment can self-register at the clinic.
The existing online booking from 12am for the same day appointment, will continue for both unit clinics as before @ medcentrehealth.com
Visit us today and experience the convenience & excellence of MEDCENTRE HEALTH
MARKHAM MCNICOLL URGENT CARE CENTRE (MMUCC)
Walk-In Clinic (வோக் இன் கிளினிக்) மற்றும் Urgent Care (துரித மருத்துவ சேவை).
இதுவரை காலமும் Unit 11 ல் ( யுனிட் இலக்கம் 11ல்) மட்டும் இடம்பெற்று வந்த மருத்துவ சேவைகள், இப்போது Unit 6 & 11 ( யுனிட் 11 உடன் 6 ம் யுனிட்டுமாக இரண்டு யுனிட்டிகளுக்கும்) விரிவாக்கப்பட்டுள்ளது.
இந்த கிளினிக்குகளில் பணியாற்றும் மருத்துவர்களின் எண்ணிக்கையும் ஏழாக (7) அதிகரிக்கப்பட்டுள்ளது.
வழமைபோல ஒன்லைன் (online) வழியாக முற்கூட்டியே பதிவு (Book) செய்யலாம்.
அல்லது நேரடியாக வருகை தர முடியும்.
+1 416-609-3333
medcentrehealth.com


உங்களிடம் ..
செலுத்தப்பட வேண்டிய கடன் இருக்கிறதா?
உங்களுக்கோர் மகிழ்ச்சியான செய்தி!
வணிக உரிமையாளர்களும் சுயதொழில் செய்வோரும்
வருமான மதிப்பீடுகள் இல்லாமல் மாதந்தோறும் $5000 வரை
அங்கவீனக் காப்பீட்டுத் தொகையைப் பெற முடியும்.
அஜித் சபாரட்ணம்
647-401-5800 | 416-439-2800
10 Thornmount Dr, Scarborough, ON M1B 3J4.

Chapel Ridge

FUNERAL HOME
& CREMATION CENTRE

# Serving the Tamil Community

## OF GREATER TORONTO

உங்கள் உறவொன்றை பிரிந்து தடுமாறும் வேளையில் இறுதி நிகழ்வுகள் பற்றிய கவலை உங்களுக்கு வேண்டாம். அனுபவத்துடன் கூடிய அன்பான சேவையை வழங்குகின்றோம்.



### At Need Funeral Arrangements

We provide a full range of service to families who have experienced a loss of a loved one, including:

*• Vistation • Funeral & Memorial Service*
*• Reception • Burial • Cremation*

மார்க்கம், மற்றும் மிசிசாகா
நகரங்களில் எமது சேவை





**Christeen Seevaratnam**
416-258-6759

**Vilosanan Sivatharman**
Funeral Director
416-993-0826



இறுதிச் சடங்கை நடத்துவதற்கான செலவை முன்கூட்டியே திட்டமிடலாமா?

### *Pre-Arranging: A Wise Choice...*

**FINANCIAL BENEFITS**

- Lock in the cost at today's prices
- Convenient time payments
- Insured against early death

**EMOTIONAL BENEFITS**


- Letting your family know your wishes
- Peace of mind to you & your family
- Relieve the added stress & burden

8911 Woodbine Ave, Markham , ON, L3R 5G1
www.chapelridgefh.com • Email: info@chapelridgefh.com

*A caring part of our community*


AGA
Beauty Skin SPA & Tranning Center
15, Karachi Drive, Unit 5, Markham On L3S0B5
Body & Face Cream On Sale
Call : 647-716-5252
Defining Beauty with style
Beauty Services
Threading
Waxing
Facial
Hair Cutting
Hair Colouring
Hair Care
Protein Treatment Head
Weight Loss program
bridal
Makeup & Hair style
Henna Designs
Eye Lash Extensions
Skin Tag Removal
Microdermabrasion
Certificate Courses
Hair Styles
Makeup
Bridal
Esthetician Courses
Threading
Waxing
Facial
Hair Care
Hair Colouring
Protein Treatment Head
Eye Lash Extensions
Skin Treatment
Microdermobrasion
Chin Lifting
Saree Wrapping
Saree Blouse Making
ARAJEN BEAUTY & SKIN CARE
2607 Englinton ave east, Unit 4,6,7, Scarbarough, On M1K2S2


JRB GROUP CORPORATION
Loans, Mortgages, Insurance, Visa,
Real Estate, Master Card, Credit Counselling
Best rate Mortgage Arranged
Almost All Services Available
Business Loans 25K to 500,00
புதிதாக ஆரம்பிக்கப்பட்ட அல்லது ஆரம்பிக்கப்படவுள்ள
சகல வர்த்தகர்களுக்குமான சிறப்பான சேவை!
FINANCE
R. R. Rajkumar B. Com (Hons), MBA
647–289–6164 / 416–655–5577


Build Your Dream Home
SABESAN'S CHOICE
We build 10,000sq. feet (minimum) warehouse from 139.00 per sq.feet.
400 Kilometre per hour Wind resistance.
Termite Proof
Compare traditional Building Energy Savings.
Mould Proof
Sound Resistence
Roof Top Greenhome
உங்கள் வீட்டுடன் இணைந்ததாக மேலதிக இருப்பிட வசதியை ஏற்படுத்த விரும்புகிறீர்களா?
எம்முடன் தொடர்பு கொள்ளுங்கள் !
Sabesan
விருது பெற்ற தொழிற்றுறை நிபுணர்
416.605.1990
kgsabesan@hotmail.com

# KEV TAX

KNOWLEDGE & EXPERIENCE IS VITAL

www.kevtax.com



FREE EFILE SERVICE

- CORPORATE INCOME TAX
- BOOKKEEPING & ACCOUNTING SERVICES
- PERSONAL INCOME TAXES
- QUALITY SERVICE WITH REASONABLE FEES
- FREE YEAR-ROUND CUSTOMER SERVICE
- CORPORATE AND SOLE PROPRIETORSHIP BUSINESS REGISTRATION

SENIORS / WELFARE RECIPIENTS
ALL RETURNS INCLUDE EFILE SERVICE

Ganthiy Selvarajah
(B.A. Sri Lanka)

TEL: 416.841.1866
FAX: 1.888.841.8829
kevtax.ganthiy@gmail.com





List your property with me...

To Book Your Pre Construction Homes & Condo

FREE - Home Evaluation
FREE - Home Staging
FREE - Professional Photography
FREE - Social Media Marketing

HOMELIFE HIGHER STANDARDS
Homelife/Future Realty Inc.

HomeLife/Future
Realty Inc.,Brokerage
205-7 Eastvale Dr,Markham ON. L3S 4N8
Bus: 905.201.9977



CALL YOUR PROFESSIONAL SERVICE

Rave
P. Raveenthiran
Broker

Dir: 416-567-2462
Email: realtor.rave@gmail.com




Financial Services
42 YEARS IN BUSINESS
KASI
THIRU
M. KASIPPILLAI & SONS INC.
3228 Eglinton Ave. E., Suite #3, Scarborough, Ont. M1J 2H6
Tel.: (416) 267-8221 Fax: (416) 267-0620


ABBIRAMI
CATERING AND TAKE OUT SERVICE
Tel: (416) 266-5372
2619 Eglinton Ave. East,
Scarborough, Ont M1K 2S2
(Between Brimly & Midland)


முருகன் புத்தகசாலை
MURUGAN
BOOK STORE
K. Makesan
Manager
5215 Finch Ave E #109,
Scarborough ON
mahesan.ka@gmail.com
416 321 0285


Babu Florist Ltd.
6055 Steeles Ave, Unit C114, Scarborough, Ontario. M1X 0A7
Temple, Wedding, Funeral & Others
Indian Malai & Jasmine Flowers Available
Call : M.Babu
416-754-8282
www.babuflorist.com
Email : info@babuflorist.com


BAYVIEW HOMES DESIGN LTD.
Dream Becomes Reality
Building Permits
Minor Veriance
Lot Severance
Legal Basement
Project Management
Kathir
416 856 6900
Subramaniam
Kathirgamanathan P.Eng.
BCIN 45205
email: kathirhomes@gmail.coml


சிவஸ்ரீ
சிவ. ஜனார்த்தன
குருக்கள்
647-449-6542
aarthananyathu@gmail.com
aarthanan@hotmail.com


KANAGAAMBIKAI
GOLD HOUSE
We Sell
*Singapore Jewellery
*Finest Quality 22K Gold
*Diamonds/ Birth Stones/ Jewellery/ Watches
We Provide
*Jewellery Repairs
Gold Items
3160 EGLINTON AVE,E.,UNIT #3,
SCARBOROUGH,ON M1J 2H4
Tel:416-269-7197


8 Shadlock St Unit #6,
Markham, ON L3S 3K9
Tel : 416-321-7552
INDRAN SWEET
& Ice Cream



வேதநாயகம் தபேந்திரன் - இலங்கை

# நல்ல நேரம்

சூரியன் மேற்கை சாயுது. இப்ப நேரம் 4 மணியாக இருக்கும். கந்தவனப்பா தனது மனைவி வள்ளிக்கு நேரக் கணக்குச் சொன்னார்.

இந்திரன் தனது கை மணிக்கூட்டைப் பார்த்தான்.அது நான்கு மணியைக் கடந்து 05 நிமிடம் காட்டியது.

கை மணிக்கூடு,சுவர் மணிக்கூடு இல்லாத இவருக்கு எப்படி நேரம் கணிக்க முடிகிறது என வியந்தான்.

கையில் மணிக்கூடு கட்டுவோரை பணவசதியில் மேம்பட்ட ஒருவராகப் பார்த்த காலம் இருந்தது. சீக்கோ,மொண்டியா,சிற்றிசன் என மணிக்கூடு வகைகளின் பிரபலம் முன்னாளில் இருந்தது.

சில்வர் கலரில்,தங்க நிறத்தில் மணிக்கூடு கட்டுவதைப் பெருமையாக நினைத்தார்கள். அது போல மணிக்கூடு கட்டியோரைப் பெருமையாகப் பார்த்தார்கள்.

1977 இல் ஜே.ஆரின் திறந்து பொருளாதாரயுகம் ஜப்பானியருக்குச் சந்தையாக முழு நாட்டையும் திறந்து விட்டது. இதுவரை காலமும் வெள்ளி, தங்கக் கலரில் இருந்த கை மணிக்கூடுகள் கறுத்த பாருக்கு மாறியது.

கசியோ என்ற ஜப்பானிய மணிக்கூடுகள் நாட்டி - னுள் புதுவரவாய் வந்தன. அதனைக் கட்டுவதில் பெருமை கொண்டாடும் புதிய பழக்கமொன்று உருவானது. அது போல பிரிட்டிஸ் காலத்துச் சுவர் மணிக்கூடுகளை ஸ்ரைல் குறைந்தது என ஒதுக்கி விட்டு மலிவான விலையில் வந்த ஜப்பானிய மணிக்கூடுகள் உள்வீட்டுச் சுவரை அலங்கரித்தன. 1977 ஐத் தொடர்ந்து வந்த ஜப்பானிய கைமணிக்கூடுகளும் சுவர் மணிக்கூடு - களும் நீண்ட காலம் பாவித்தன. ஜப்பானியர் இலங்கையின் சந்தையைக் கைப்பற்றும் நோக்கில் உயர்தரமான இலத்திரனியல் பொருள்களை உருவாக்கி அனுப்பினார்கள்.

1987 யூலை 30 முதல் 1990 மார்ச் மாதம் வரையில் இலங்கையில் நிலை கொண்டிருந்த இந்தியப் படைகள் மீள நாடு திரும்பும் போது ஓடியோடி ஜப்பானியப் பொருள்களை வாங்கியதி - லிருந்து ஜப்பானியப் பொருள்களின் தரம் தெரிகிறது.

உலகில் உயர்தர மணிக்கூடுகளைத் தயாரிப்பதில் சுவிற்சலாந்து நாடு பெயர் பெற்றதாக உள்ளது. எம்மவரின் புலம் பெயர்வு வாழ்க்கை எம்மில் பலருக்கு சுவிஸ் மணிக்கூட்டைக் கையில் கிடைக்கச் செய்து விட்டது.

ஜப்பானியர்களின் பொருள்கள் அதிக விலையு - டையதாக மாற சீனர்களின் மணிக்கூடு எமது நாட்டில் புழக்கத்தில் வந்து விட்டது. அரசாங்கத் - தின் சீனச்சார்புக் கொள்கையும் இதற்கொரு காரணம் எனலாம்.

கைமணிக்கூடுகளுக்குத் தோலினால் ஒரு பார்சிலர் இடுவார்கள். அது ஒரு அழகாககத் தெரியும். வெப்பம் அதிகமுள்ள எமது நாட்டில் மணிக்கூடுகள் ஒருவித செழும்பு பிடித்துப் பழுதாகப் போகும்.

மணிக்கூட்டில் வோட்டர்புருவ் அதாவது தண்ணீர் உள்ளுக்குள் போகாத தன்மை உள்ள மணிக்கூடு என ஒரு வகையுண்டு. அதனை வாங்கினால் நன்று என நினைப்போரும் உண்டு.

மணிக்கூட்டு வீதி, மணிக்கூட்டுக் கோபுரம் என இடங்களின் பெயர்கள் உண்டு. இலங்கையில் 1989 முதல் 1993 மே மாதம் வரையில் பிரேமதாசா ஜனாதி - பதியாக இருந்த காலத்தில் பிரதேசத்துக்குப் பிரதேசம் ஆடைத் தொழிற் - சாலைகளும் மணிக்கூட்டுக் கோபுரங்களும் அமைத்தார்.

அவரது மறைவைத் தொடர்ந்து அடுத்த ஆண்டே சந்திரிகா அம்மாவின் ஆட்சி வந்தது. பெருமளவுக்கு மணிக்கூட்டுக் கோபுரங்கள் தேடுவாரற்றுப் போயின.

பெரிய நகரத்தில் நடுநாயகமாக நிற்கும் மணிக்கூட்டுக் கோபுரம் நான்கு பக்கமும் நான்கு நேரத்தைக் காட்டும் அதிசயத்தையும் கண்டுள்ளோம்.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கு அண்மையில் உள்ள வானுயர்ந்த மணிக்கூட்டுக் கோபுரம் பிரித்தானிய அரச குடும்பத்தினால் அமைக்கப்பட்ட - தாக வரலாறு உண்டு.

வீடுகளில் உள்ள சுவர் மணிக்கூட்டைச் சரியான நேரத்திற்கு வைத்திருப்போர் 10 முதல் 15 நிமிடங்கள் கூடுதலாக விடுவோர் என இருவகைப்பட்டோர் உண்டு. நேரம் கேட்பதற்காக றேடியோவை வைத்துப் பாடல்களைக் கேட்டபடி வேலை செய்வோரும் உண்டு.

வானொலிகளின் செய்தி இசையை வைத்துக் கொண்டு இப்போது நேரம் என்ன எனக் கூறும் பண்பாடும் எம்மிடம் உண்டு. றேடியோச் செய்திகளுக்கு முன் இசை இடாமல்  செய்திகளை ஒலிபரப்பும் காலத்தில் நிற்கின்றோம்.

இப்போது ஊருக்கு கோயில்களின் கோபுரங்களுடன் இணைந்ததாக இராட்சத மணிக்கூடுகள் வந்து விட்டன. அந்த மணிக்கூடுகளின் மணி அடிக்கும் ஓசையை வைத்து நேரம் கணிப்பார்கள்.

வசதி குறைந்த முற்காலத்தில் இரும்புத் துண்டு அல்லது மணியோசை வரும் உலோகத்துண்டு ஒன்றைக் கயிற்றில் கட்டிவிட்டு இரும்புக் கம்பியால் அடிப்பார்கள். அதிகாலை 4 மணி அல்லது 5 மணிக்கு அடிப்பார்கள்.

இதனைத் திருந்தாதி அடித்து விட்டார்கள். நித்திரை விட்டு எழும்புங்கோ எனக் கூறுவோர் உண்டு. திருந்தாதி என்பது கிறீஸ்தவர்களது சொல்லாடல்.

காங்கேசன்துறை தூங்காத நகரமாக இருந்த காலத்தில் அங்கு வேலை முறைக்கு சங்கு ஊதுவார்கள். சங்கின் ஓசையை வைத்து அந்தச் சுற்றாடலில் உள்ளோர் இப்போது என்ன நேரமெனக் கூறுரர்கள். நேரம் சொல்லும் தன்மையை சங்கு செய்தது. அது போல புகையிரதம் செல்லும் சத்தத்தை வைத்து அது என்ன புகையிரதம் எத்தனை மணிக்கு ஊரைக் கடக்கும் என்பதை வைத்து நேரம் சொல்லும் வழக்கம் இன்றும் உண்டு.

உலக வரலாற்றில் சீனர்கள், இந்தியர்கள், எகிப்தியர்கள், தமிழர்கள் நேரத்தைக் கணிக்கும் ஒரு வழக்கத்தைக் கொண்டிருந்தார்கள். நேரக் கணிப்புக்குப் பல்வேறு வகையான முறைமைகள் இருந்துள்ளன.

பஞ்சாங்க நேரம் என்றதொரு வழக்கம் எம்மிடையே உண்டு.1990 களைத் தொடர்ந்து கேபிள் தொலைபேசி இருந்த கொம்யூனிகேசன் யுகத்துக் காலத்தில் ஐந்தாறு விதமான மணிக்கூடு இருக்கும்.

(30ம் பக்கம் வருக)



முனைவர் பால. சிவகடாட்சம்

# படித்ததும் கேட்டதும் 67


## எவருக்கும் தீங்கு செய்யாத வாழ்வு

நலங்கிள்ளி, நெடுங்கிள்ளி இருவருமே சோழர் குடியில் பிறந்தவர்கள். இருவருமே சோழநாட்டை ஆளும் உரிமை தமக்கே உரியதென நினைப்பவர்கள். "மன்னர் குடியில் பிறந்ததனால் மட்டுமே அரசனாக நினைப்பவன் ஆண்மையில்லா - தவன். தன்வீரத்தால் ஆட்சியைப் பெறுபவனே உண்மையான அரசன்" என்னும் கொள்கை உடையவன் சோழன் நலங்கிள்ளி. நெடுங்கிள்ளியோ நலங்கிள்ளியை எதிர்த்துப் போரிடத் துணிவில்லாது உறையூரில் தன் கோட்டைக்குள் பதுங்கியிருப்பவன்.

"பணிந்து கேட்போருக்கு உயிரையும் கொடுப்பேன் எதிரிகளாயின் துரத்தித் துரத்தி அடிப்பேன்" என்று கூறும் நலங்கிள்ளியைத் தேடிப்போய் பாடிப் பரிசில் பெறும் புலவர்களுள் கோவூர் கிழாரும் ஒருவர். தமது சமகாலப் புலவர்களைப் போல் மன்ன - ரிடம் சென்று பாடிப் பரிசுபெற நினைத்து நெடுங்கிள்ளியைத் தேடிச்சென்ற ஓர் அப்பாவிப் புலவரைத் தன் எதிரி நலங்கிள்ளி அனுப்பிவைத்த ஒற்றன் என்று சந்தேகித்து அப்புலவரைக் கொன்றுவிட முடிவெடுக்கின்றான் நெடுங்கிள்ளி. தக்க சமயத்தில் சங்கப்புலவர்களின் பெருமை பற்றி நெடுங்கிள்ளிக்கு எடுத்து - ரைத்து அந்த ஏழைப்புலவனைக் காப்பாற்றுகிறார் கோவூர்கிழார்.

வள்ளியோர்ப் படர்ந்து, புள்ளின் போகி,<br>
"நெடிய" என்னாது சுரம் பல கடந்து<br>
வடியா நாவின் வல்லாங்குப் பாடி,<br>
பெற்றது மகிழ்ந்து, சுற்றம் அருத்தி,<br>
ஓம்பாது உண்டு, கூம்பாது வீசி,<br>
வரிசைக்கு வருந்தும் இப் பரிசில் வாழ்க்கை<br>
பிறர்க்குத் தீது அறிந்தன்றோ? இன்றே திறப்பட<br>
நண்ணார் நாண, அண்ணாந்து ஏகி,<br>
ஆங்கு இனிது ஒழுகின் அல்லது, ஓங்கு புகழ்<br>
மண் ஆள் செல்வம் எய்திய<br>
நும் ஓரன்ன செம்மலும் உடைத்தே.

- புறநானூறு 47



"வள்ளல்களை நாடி, பறந்தோடிச் சென்று, தூரம் என்று பாராது, காடு பல கடந்து, குற்றம் தெரியாத நாவினால் தம்மால் இயன்றவரை கவிபாடி, தரப்படும் பரிசுகளை மனமுவந்து ஏற்று, உறவுகளுக்கு உணவளித்து, சேமித்துவைக்காது உண்டு, முகம் சுருங்காது கொடுத்து, அன்பளிப்பையே நம்பி வாழும் புலவர்தம் வாழ்க்கை எவருக்கும் தீங்கு விளைவிக்காத ஒன்றல்லவோ? பகைவர் வெட்கமுற, தலை நிமிர்ந்து நடக்கும் நல்லொழுக்கம் நிறைந்த பாவலர் வாழ்க்கை நாடு, படை, செல்வம் என்னும் மூன்றும் உடையோராய் புகழப்படும் உங்களது வாழ்வு போன்று சிறப்பு உடையதே" என்று நெடுங்கிள்ளிக்கு அறிவுறுத்துகிறார் கோவூர் கிழார்.

## A life that doesn't harm anyone

Both Nalankilli and Nedunkilli belong to the Chola dynasty and both believe they have the right to rule the Chola country. Nalankilli argues that governance based solely on birthright is ineffective, and a true king gains power through courage. In contrast, Nedunkilli is a coward who avoids confronting Nalankilli, opting to hide in his fort at Uraiyur.

Nalankilli boldly declares, "I am willing to sacrifice even my life for those who worship me and seek my help, but I will not spare those who oppose me." Nalankilli is known for his patronage of great Sangam poets including Kovur Kilar. In a bid to align himself with the poets of his time, an innocent poet approaches Nedunkilli, seeking rewards for his songs. However, Nedunkilli becomes suspicious, believing the poet to be a spy sent by his rival, King Nalankilli, and contemplates killing him.

In a pivotal moment, Kovur Kilar intervenes and saves the vulnerable poet by enlightening Nedunkilli about the modest and compassionate lifestyles of Sangam poets.

***Top of Form***

"Seeking patrons, moving fast like a bird, without considering distance, and traversing numerous forests, a poet sings with his gentle tongue. He willingly accepts gifts, providing sustenance for both his relatives and himself, and lives without accumulating wealth. He gives without hesitation and relies on the generosity of others. Isn't this the life of a poet that causes no harm? The life of such a poet, who may outshine his rivals but maintains his pride and virtue, is as magnificent as the life of a king who is renowned and possesses a country, an army, and great wealth."

- Purananuru 47


---

# முதலாவது கறுப்பின கனடிய சபாநாயகர்

கனடிய நாடாளுமன்றத்தில் புதிய சபாநாயகராக Greg Fergus கடந்த மாதம் தெரிவானார். கனடிய நாடாளுமன்றத்தின் 38வது சபாநாயகராக தெரிவான இவரே முதலாவது கறுப்பினத்தவர். நாசி படையைச் சேர்ந்த ஓய்வு பெற்ற ஒருவரை நாடாளுமன்றத்துக்கு அழைத்து மதிப்பளித்த தவறை ஏற்றுக் கொண்ட 37வது சபாநாயகர் Anthony Rota தமது பதவியை ராஜினாமா செய்ததால் புதிய சபாநாயகர் தெரிவு இடம்பெற்றது.

# முக்கிராமங்களின் நூல் கட்டுவனில் வெளியீடு

கட்டுவன், வர்த்தலைவிளான், மயிலிட்டி தெற்கு, ஆகிய முக்கிராமங்களின் சமூக, பொருளாதார மற்றும் கலை, கலாசார, மேம்பாடுகளுக்கு முதுகெலும்பாக விளங்கிய, பாலர் ஞானோதய சங்கத்தின் நூற்றாண்டு நிறைவுக் கலை நிகழ்வுகளின்போது, கனடாவில் வாழும் திரு. வேலாயுதர் விவேகானந்தன் அவர்களால் எழுதித் தொகுக்கப்பட்ட ‘எமது கிராமங்களும் அவற்றைச் செதுக்கிய சிற்பிகளும்’ என்னும் நூல் வெளியிடப்பட்டது.




பலாலி இராணுவ முகாமின் உயர் பாதுகாப்பு வலயத்தில், இருபத்தியெட்டு ஆண்டுகளாக, (1990 - 2018) இக்கிராமங்கள் சிக்கிச் சிதைந்து சீரழிந்தன. 2018 ஆம் ஆண்டு சித்திரை வருடப்பிறப்புடன் விடுவிக்கப்பட்ட இக்கிராமங்களின் சில பகுதிகள் கடந்த ஐந்து ஆண்டுகளாக, ஊர், மற்றும் புலம்பெயர் மக்களினது முயற்சியால் வீறுகொண்டு வளர்ச்சி பெற்று வருகின்றன.

பாலர் ஞானோதய சங்கத்தின் பிரித்தானிய, சுவிற்சர்லாந்து கிளைகளினால், கட்டுவனூரில் அமைக்கப்பட்ட சங்கத்தின் புதிய மண்டபத்தில், பெருந்திரளான ஊர் மக்கள் முன்னிலையில் வெளியிடப்பட்ட இந்நூல், போர்க்காலத்துக்கு முன், முக்கிராமங்களினதும் வனப்பையும் செழிப்பையும் எடுத்துக் கூறுகிறது. அத்துடன் அக்கிராமங்களின் வளர்ச்சிக்கும், பெருமைக்கும் தன்னலம் கருதாது உழைத்த கல்விமான்கள், கலைஞர்கள், வர்த்தகப் பெருமக்கள், எனப் பலரது வாழ்க்கைக் குறிப்புகளும், அவர்கள் ஆற்றிய பணிகளும் இடம்பெற்றுள்ளன.

இறுதியாக கட்டுவனூருக்கே உரிய தனித்துவம் மிக்க கலைவடிவமான வசந்தன் கூத்துப் பாடல்களும், ஆலயங்களில் எழுந்தருளியி - ருக்கும் தெய்வங்கள் மீது, அவ்வூர் தமிழ் அறிஞர்களால் பாடப்பெற்ற பாடல்களும் இடம்பெற்றுள்ளன.

1992ம் ஆண்டிலிருந்து தமிழர் தகவலில் தொடர்ந்து எழுதி வரும் திரு. விவேகானந்தன் அவர்கள், தமிழர் தகவல் வெளியீட்டுக் குழுவின் மூத்தவர் ஆவார்.

Real estate excellence, every time.

Rajmogan Selliah
Sales Representative

Direct: 416 569 3200
Email: srajmogan@gmail.com

Buy | Sell | Lease | Invest

210 - 80 Corporate Drive,
Toronto, ON M1H 3G5
Office: 416 284 5555



Residential, Commercial and Investment Properties

# மரபும் மாண்பும்...

ஆகுகவே!” மானுடப் பொதுமையைப் போற்றுகின்றார்.

மாந்தர் சிந்தனை, விரிந்த பரந்த உலகத்தோடு இணைந்து இயங்கும்போதுதான் விரிவும் பண்பும் உயர்வுறுகின்றன. மானுடத்தின் பரப்பெல்லைகளை நிலம், மொழி, மதம் என்பவற்றுக்குள் மட்டுப்படுத்தி விடுவது சிறப்பன்று. உயிரெனத் தோன்றிய அனைத்தையும் அணைத்துச் செல்வதே பேரறம், இறையை நிகர்த்த பண்பு. இதனைக் காலங்காலமாக தமிழர் கைகொண்டு வந்துள்ளனர் என்பதையே இச்சிறு ஆக்கம் விளக்குகின்றது.

இக்காலத்தே உலகெங்கும் பலவினத்தவரோடு இணைந்து கலந்தும் வாழும் தமிழர்கள் இப்பண்பினையே போற்றி வருகின்றனர். இப்பண்பு இயல்பாகவே தமிழர் மனங்களுக்குள் இணைந்திருப்பதே பன்முகப் பண்பாட்டுத்தன வாழ்வுச் சிறப்புக்குக் காரணம் எனலாம்.

‘யாதும் ஊரே யாவரும் கேளிர்’ என்ற எம் மூதாதையர் கோட்பாட்டை வாழ்வின் குறிக்கோளாகவே கொண்டியங்குதல் நன்று.

# நல்ல நேரம்.....

ஒரு மணிக்கூடு மேற்கு ஐரோப்பிய நாடுகளது நேரம் காட்டும்.இன்னொரு மணிக்கூடு கனடா நேரம் காட்டும். வேறொரு மணிக்கூடு ஆஸ்திரேலிய நேரம் காட்டும்.மலேசியா, சிங்கப்பூர், மத்திய கிழக்கு நாடுகளது நேரங்களைக் காட்டவும் தனித்தனியான மணிக்கூடுகள் இருந்தன.

மணிக்கூடு கட்டுவதைத் தேவை மிகுந்த ஒரு விடயமாகப் பார்த்த காலமும் மெல்லமெல்ல விடை பெறத் தொடங்கி விட்டது.

கைத்தொலைபேசிகளின் வருகை பட்டிதொட்டியெங்கும் பரவி ஏழைகளின் கைகளுக்கும் அவை போகத் தொடங்க கைகளில் மணிக்கூடு கட்டுவோர் தொகை குறையத் தொடங்கியது.

கைத்தொலைபேசியிலேயே நேரம் பார்க்கலாம். எலாம் வைக்கலாம். அதிலும் ஸ்மார்ட் தொலைபேசி யுகத்தின் பேரெழுச்சி கைமணிக்கூடுகளை மட்டுமல்ல ரோச் லைற்றுகளைக் கொண்டு திரியும் வழக்கத்தையும் அற்றுப் போகச் செய்தது. பவர்பாங்க் இருந்தால் போதும், சார்ச் போடுவதற்கு அலையத் தேவையில்லை.

தகவல் தொழில்நுட்ப யுகத்தின் பேரெழுச்சி மலிவான விலையில் எல்லாப் பொருள்களையுமே கொடுக்கிறது. அதன் விளைவு பல நூற்றாண்டு காலம் கதாநாயகனாக இருந்த கைமணிக்கூடுகளின் பாவனையை தேய்வடையச் செய்துவிட்டது.

மாற்றம் ஒன்றே மாறாதது என்ற உலக நியதியின் முன்பாக கைமணிக்கூடும் விதிவிலக்காகப் போகாதல்லவா!

# கண்டதை மீண்டும்...

தனிநாடு ஒன்றுதான் எமக்குள்ள ஒரேவழி என்ற முடிவுக்கு வந்தோம்.

தனிநாடு அமைப்பதென்பது சுலபமானதொன்றல்ல என்பது எமக்குத் தெரியும். எனினும், இந்த நாட்டில் நாம் சிங்கள மக்களின் பிடியிலிருந்து விடுபடவேண்டும். அல்லது, அழிந்து போகவேண்டும். நமது மூதாதையர் புத்திசாலிகளாக இருந்தனர். தமக்கென்று ஒரு நாட்டை அவர்கள் வைத்திருந்தார்கள். நாம் பிரிந்துபோவதை இந்த அரசாங்கம் ஏன் மறுக்கிறது என்பது தெரியவில்லை. இந்த அரசாங்கம் மறுத்தாலும், இனி வரப்போகின்ற ஒரு சிங்கள அரசாங்கம் எமது நாட்டைப் பிரித்துத் தரும். அயர்லாந்து நூறு வருடங்களுக்குமேல் போராடி பிரிந்துசென்றது. நாம் எமது முடிவை உலகநாடுகளுக்கு அறிவித்துவிட்டோம். எமது கோரிக்கைகளை அவை ஏற்றுக்கொள்ளும்.

சாத்வீகமான முறையிலேயே போராடுவோம். இந்த நாட்டில் நாம் உரிமைபெறுவோம். அல்லது, அழிந்துபோவோம். இந்தப் பின்னணியில்தான் எமது கொள்கை இருக்கின்றது. எங்கள் எதிர்காலம் எங்கள் சிந்தனையிலேயே தங்கியிருக்கிறது.” என்று மெதுவான தனது குரலில் உரக்கச் சொல்லியிருக்கிறார் எஸ்.ஜே.வி.

அந்தச் சிந்தனையை தட்டியெழுப்பத்தான் செல்வநாயகம் நினைவுத்தூபி யாழ்ப்பாணத்தில் நிற்கிறது!




ALL YOUR CATERING NEEDS
CALL 416 - NANTHA 1 ext. 1
416 - 626-8421 ext. 1
FEEL GOOD
Taste Together
நந்தா உணவகம்
NANTHA RESTAURANT
INDIAN / CEYLON TAMIL RESTAURANT IN GTA
Kipling & Steeles
(416-NANTHA-1 Ext. 2)
#18 - 5010 Steeles Ave W Etobicoke, ON M9V 5C6
Warden & Finch
(416-NANTHA-1 Ext. 3)
Bridlewood Mall #106 - 2900 Warden Ave, Scarborough, ON M1W 2S8
Middlefield & Steeles
(416-NANTHA-1 Ext. 4)
#2 - 2002 MiddleField Rd Markham, ON L3S 1Y5
(Beside Fresh Food City Super Store)
(416-NANTHA-1 Ext. 5)
#8 - 2200 Brock Rd, Pickering, ON L1X 2R2
Food Court - 6, Majestic City
(416-NANTHA-1 Ext. 6)
2900 Markham Rd, Scarborough, ON M1X 1E6
416 - NANTHA 1 | 416 - 626-8421
www.nantha.com


‘தமிழர் தேசிய நினைவெழுச்சி நாள்’
மார்க்கம் ஃபெயார்கிறவுண்ட்ஸ்’இல்
மாவீரர் நாள்
நவம்பர் 27-2023 - திங்கட்கிழமை
எங்களுக்காகத் தமிழீழ மண்ணுக்காகத் தமிழீழத் தேசியத்துக்காகத்
தமது உயிரை ஈந்த மாவீரர்களை வணங்கும் மாபெரும் வணக்க நிகழ்வு
Tamil National Heroes Day
To Remember Our Heroes’
who Sacrificed their Life for us,
for Our Treasured Land and Tamil Nationalism
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
றொறன்ரோ
Markham Fairgrounds
10801 McCowan Road
Markham, ON L3P 3J3
(McCowan Road & Elgin Mills Road East)
கனடியத் தமிழர் நினைவெழுச்சி அகவம்
வழமைபோன்று ஒரே இடத்தில் மூன்று நிகழ்வுகள்
1ஆம் நிகழ்வு: காலை 7:00 மணி
2ஆம் நிகழ்வு: மதியம் 1:00 மணி
3ஆம் நிகழ்வு: மாலை 6:00 மணி
மொன்றியல்
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:00 மணி
Le Château Royal
3500 Bd du Souvenir,
Laval, QC H7V 1X2
ஒட்டாவா
27-11-2023
திங்கட்கிழமை
மாலை 5:30 மணி
Nepean Sportsplex - Hall A
1701 Woodroffe Ave,
Nepean, ON K2G 1W2
Tell: 647-619-3619 mail: ctro@tamilremembrance.com / www.tamilremembrance.com / www.facebook.cm/tamilremembrance

# NKS Draperies & Blinds



210 Silver Star Road, Unit. 825
(Midland & Finch) Scarborough, ON

**416 321 6420**



- Vertical blinds
- Venetian blinds
- Draperies
- Curtains
- Shutters


**உங்கள் இல்லங்களை மாளிகையாக்கிட**

அழையுங்கள்
**கேதா**

தமது சிறப்பான சேவையினால்
தகுந்த விருதுகளைப் பெற்ற நிறுவனம்

## Dr. Shan A. Shanmugavadivel & Associates

## டாக்டர் அ. சண்முகவடிவேல்



* Orthodontics * Implants * Cerec Crowns

பற்களை ஒழுங்கு செய்தல், ‘இம்பிளான்ற்’ சிகிச்சைகளில் கனடாவில் பயின்ற பல வருட அனுபவமுள்ள குடும்ப பல் வைத்தியர்.

**MONDAY - FRIDAY**
**(416) 266-5161**
(Near Kennedy Subway - Rainbow Village Building)

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**
2466 Eglinton Avenue East, Unit #7
Scarborough, Ontario M1K 5JB



டாக்டர் எம்.கே. முருகானந்தன்

# சமச்சீரான உணவே நல்வாழ்வுக்கு உகந்தது!

## பித்தப்பையில் கற்கள் என்ன செய்ய வேண்டும்

'என்ன செய்யிறது என்றே புரியவில்லை. எனக்கு ஒரு வருத்தமும் இல்லை. வயது 40ஆகுதென்று சும்மா ஒரு மெடிக்கல் செக்கப் செய்து பாப்பம் என்று போனன். அவையள் எனக்கு பித்தப் பையில் கல்லு எண்டு சொல்லுகினம்' என்று சொன்னார்.

'ஓண்டும் செய்ய வேண்டாம். போசாமல் இருங்கோ' என்று நான் சொன்னதும் ஆச்சரியப்பட்டார்.

பித்தப் பை என்பது எமது ஈரலுக்கு சற்றுக் கீழே வலது புறமாக இருக்கும் பியர்ஸ் பழம் போன்ற தோற்றத்தை உடைய ஒரு சிறிய பையாகும். இது ஈரலில் சுரக்கும் பித்த நீரை சேமித்து வைத்திருந்து சமிபாட்டு வேளைகளில் உணவுக் கால்வாயிற்குள் செலுத்தும் பணியை ஆற்றுகிறது.

**பித்தக் கற்கள்**

இந்தப் பித்தப் பையிற்குள் உள்ள திரவமான பித்த நீரில் கல்லுப் போல படிவுகளாக உருவாவதுதான் பித்தக் கற்களாகும்.

சிறுமணல் அளவிலிருந்து பெரிய பந்து வரையாக இதன் அளவு வேறுபடலாம். சிலருக்கு ஒரே நேரத்தில் ஒன்றுக்கு மேற்பட்டதாக பல கற்கள் உருவாகும். இருந்தபோதும் பித்தக் கற்கள் பெரும்பாலும் எந்த அறிகுறிகளையும் ஏற்படுத்தாமல் வாளாதிருக்கும். வேறு தேவைகளுக்காக ஸ்கான் பரிசோதனை அல்லது சிடி ஸ்கான் போன்ற பரிசோதனைகள் செய்யப்படும் - போதே பெரும்பாலும் இவை இருப்பது கண்டுபிடிக்கப்படுகிறன.

மேற்கூறிய நபர் சாதாரண செக்அப்பிற்கு சென்ற போது தற்செயலாகக் கண்டுபிடிக்கப்பட்டதை ஏற்கனவே சொல்லியிருந்ததை நினைவுபடுத்துங்கள்.

அவ்வாறானால் பித்தப்பையில் கல்லிருந்தாலும் வெளிப்படையாக எந்த அறிகுறிகளும் இருக்காதா, பிரச்சனைகள் ஏதும் ஏற்படாதா என்று கேட்பீர்கள். சாதாரணமாக எந்தவித அறிகுறிகளையும் ஏற்படுத்தாது பேசாமல் கிடக்கும். ஆனால் அவற்றால் ஏதாவது சிக்கல்கள் ஏற்பட்டால் மட்டுமே அறிகுறிகள் தோன்றும்

அந்தக் கற்கள் பித்தப் பையிலிருந்து வழுவி பித்தக் குழாய்களுக்குள் சென்று அதை அடைத்து நின்றால் அல்லது பித்தப்பையில் கிருமித் தொற்று ஏற்பட்டால் வலி ஏற்படும். இருந்தபோதும் வயிற்றில் தோன்றும் வலிகள் எல்லாமே பித்தக் கற்காளால் ஏற்படுபவை அல்ல என்பது தெரிந்ததுதானே. இதன் வலி பிரத்தியேகமானது. திடீரென ஏற்பட்டு மிகக் கடுமையாக வேதனை ஏறிச் செல்லும். இவ் வலியானது பொதுவாக வயிற்றறையில் வலது புறமாகத் தோன்றும்.

சில வேளை நடுவயிற்றிலும் நெஞ்செலும்புக் கூட்டின் அருகாகவும் அத்தகைய கடும் வலி தோன்றுவதுண்டு.

இன்னும் சிலருக்கு வயிற்றில் வலிக்காது ஆனால் பிற்புறமாக தோள்மூட்டு சீப்புகளுக்கு இடையில் வலிக்கலாம். வலது தோள் மூட்டில் வலியெடுப்பது மட்டும் உண்டு. நோய் ஓரிடத்தில் இருக்க வலி வேறு இடத்தில் பிரதிபலிப்பதை தொலைவிட வலி (Referred Pain) எனச் சொல்வார்கள்

வலியானது பொறுக்க முடியாததாக இருப்பது மட்டுமின்றி நடந்து திரிவதாலோ வயிற்றை அழுத்திப் பிடிப்பதாலோ, படுக்கையில் கிடப்பதாலோ தணிவதில்லை. ஒரு சில நிமிடங்கள் முதல் ஒரு சில மணிநேரம் வரை இந்த வலியானது நீடிக்கக் கூடும். சிலருக்கு வலியுடன் வாந்தியும் சேர்ந்து வருவதுண்டு.

பித்தப்பையில் கல்லிருப்பதுடன், கிருமித் தொற்றும் ஏற்பட்டிருந்தால் கடுமையான காய்ச்சல் நடுக்கத்துடன் வருவதுண்டு. ஒரு சிலருக்கு சிறுநீர் கடுமையான மஞ்சள் நிறத்தில் கழிவதுடன், கண்களிலும் மஞ்சள் நிறம் படரலாம்.

பித்தக் கற்கள் தோன்றக் காரணம் என்ன? ஒருவரது பித்த நீரில் கொலஸ்டரோல் அளவானது வழமையை விட அதிகம் இருந்தால் பித்தக் கற்கள் தோன்றலாம். பொதுவாக ஈரலானது எமது குருதியில் உள்ள கொலஸ்டரோலை உறிஞ்சி பித்த நீர் ஊடாக வெளியேற்றுகிறது. அவ்வாறு பித்தத்தில் கலக்கும் கொலஸ்டரோலின் அளவு வழமை - போலிருந்தால் அது பித்த நீரில் கரைந்து சுலபமாக வெளியேறிவிடும். ஆனால் அதன் செறிவு அதிகமாக இருந்தால் கட்டிபட்டு கற்களாக மாறுகிறது என்கிறார்கள்.

அதேபோல நாளந்தம் சிதைவடையும் செங்குருதிக் கலங்களை ஈரல் பிரித்து பிலிரூபின் (Bilirubin) ஆக வெளியேற்றுகிறது. சில நோய்கள் காரணமாக (ஈரல்சிதைவு, குருதி நோய்கள், பித்க்குழாயில் கிருமித் தொற்று) செங்குருதிக் கலங்கள் அதிகளவில் சிதைந்தால் அதன் செறிவு பித்த நீரில் அதிகரிக்கும். அதனாலும் கற்கள் தோன்றலாம்.

அதேபோல பித்தப் பையிலிருக்கும் பித்த நீரை உணவுக் கால்வாயிற்குள் வெளியேற்றும் பொறிமுறையில் (கல் கட்டி போன்றவற்றால்) தடங்கல் ஏற்பட்டாலும் பித்தக் கற்கள் தோன்றும் வாய்ப்புண்டு.

கொலஸ்டரோலால் அதிகரிப்பால் தோன்றும் பித்தக் கற்கள் மஞ்சள் நிறமாகவும், பிலிருபின் அதிகரிப்பதால் உண்டாகும் கற்கள் கருமையாகவோ கடும் பிரவுண் நிறமாகவோ இருப்பதை இவ்விடத்தில் சொல்லது பொருத்தமாக இருக்கும்.

'ஓண்டும் செய்ய வேண்டாம். போசாமல் இருங்கோ' என்று ஆரம்பத்தில் சொன்னது வேறு எந்தப் பிரச்சனைகளும் இல்லாமல் தற்செயலாக பரிசோதனைகளின் போது கண்டுபிடிக்கபட்ட பித்தப்பை கற்கள் உள்ளவர்களுக்கு பொருந்தும். பெரும்பாலனவர்கள் அத்தகையவர்களே.

ஆயினும் கடும் வலி அல்லது கிருமித் தொற்று போன்றவை ஏற்பட்டால் மேலதிக சிகிச்சை தேவைப்படும். கற்களால் பிரச்சனை ஏற்படுகிற - தெனில் அதற்கான சிகிச்சை பித்தப்பை அகற்றல்தான். அத்துடன் பித்தப் பை என்பது ஒரு அத்தியாவசிய உறுப்பு அல்ல. அது அகற்றப்பட்டாலும் எந்தவித பிரச்சனைகளும் இன்றி வாழ முடியும்.


OIL CHANGE SPECIAL $34.95
Semi-Synthetic Oil Change includes:
+ Tax & Disposal Fees
Up to 5 L Standard Motor Oil
New Filter
Free Vehicle Inspection
Complete Front & Rear Brake Replacement or $25 off on each
$50 OFF
FREE!
BRAKE OR SHOCK INSPECTION
LIMITED TIME OFFER
SEE STORE FOR DETAILS
MY MECHANIC
இப்போது
இரண்டு இடங்களில்!
MY MECHANIC AUTO & TIRE
4530 Steeles Avenue East
Markham, ON L3R 0L2
905-946-1000
1095 Ellesmere Road,
Scarborough ON M1P 2WP
416-757.1000
info@mymechanicauto.ca
mymechanicauto.ca


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
On high with your thoughts
PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344
585 Middlefield Rd Unit # 3, Scarborough, ON., M1V 4Y5

ISSN 1206-0585

